



# ஞானச்சுடர்

## ஆனி மலர் 2000




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

## குறள் வழி

" தன்னுயிர் தான்அறப் பெற்றானை
மன்னுயி ரெல்லாம் தொழும்" [ ஏனைய

பொருள் :-
தவவலிமையில் சிறந்தவனை எல்லா உயிர்
களும் வணங்கும்.



குருவே துணை

# நற்சிந்தனை

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲

## எங்கள் குருநாதன்

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழி தோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரிசனஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன் ( 6 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 30

2000 ஆனி

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் ...... | 1 - 4 |
| 2) | மனிதன் மனிதனாக வாழ | 5 - 7 |
| 3) | பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் ..... | 8 - 9 |
| 4) | அன்பு நெறிநின்று அடியார்கள் ஆற்றிய ... | 10 - 11 |
| 5) | பிரார்த்தனை | 12 - 13 |
| 6) | பன்னிரு திருமுறைகளின் தொகுப்பும் சிறப்பும் | 14 - 16 |
| 7) | சைவசமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் | 17 - 20 |
| 8) | தாய் உள்ளம் | 21 - 22 |
| 9) | நெஞ்சில் மலரும் நட்பு | - 23 |
| 10) | நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம் | 24 - 25 |
| 11) | ஸ்ரீ முருக மந்திரம் | 26 - 30 |
| 12) | மலர் தந்த படிப்பினைகள் | 31 - 32 |
| 13) | சந்நிதியான் | 33 - 36 |
| 14) | மயில்வாகன சுவாமிகளின் குருபூசைத்தினம் | - 37 |
| | இதன் தொடர்ச்சி | 41 - 42 |
| | மாணவர் பக்கம் | |
| 15) | சங்கம வழிபாடு | 38 - 39 |
| 16) | Easy Way to Learn English (Part 26) | - 40 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 383/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்"
## வைகாசி மாத வெளியீடு

வெளியீட்டுரை:-

வைகாசி மாத வெளியீட்டுரையை யாழ்/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் மேற்கொண்டார்கள். இருளைப் போக்கி ஒளியைத் தந்து எமது வாழ்க்கையின் பல்வேறு வகையான முன்னேற்றத்திற்கும் ஞானச்சுடர் பயன்படுவதைத் தனது ஆரம்ப உரையில் ஆசிரியை எடுத்துக் காட்டினார்கள். குறிப்பாக பாரதக்கதையை சிறு சிறு பகுதியாக மாதந்தோறும் வழங்கி மக்களை நல்வழிப்படுத்துவது மிகவும் சிறப்பான விடயம் என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

மதிப்பீட்டுரை:-

ஓய்வுபெற்ற வடக்குக்கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் செல்வி இலகுமி பெரியதம்பி அவர்கள் நூலிற்கான மதிப்பீட்டுரையை வழங்கினார்கள். ஞானச்சுடர் தொடர்ந்து பிரகாசித்துக் கொண்டிருப்பதற்காக அதற்கு ஆக்கங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற அன்பர்களுக்கு முதலில் அவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

சுடர்தரும் தகவல் என்ற பகுதியில் வெளிவந்து கொண்டிருக்கின்ற விடயங்களைக் குறிப்பிட்டு வைகாசிமாத மலரில் இடம் பெற்றுள்ள இசை தொடர்பான விடயங்கள் பாடசாலை மாணவர்களுக்கும் எவ்வளவு முக்கியமானது என்பதை எடுத்து விளக்கினார்கள்.

மலரில் இடம்பெற்ற ஒவ்வொரு கட்டுரை பற்றியும் சுருக்கமாக மதிப்பீட்டுரையை அம்மையார் வழங்கினாலும் சில கட்டுரைகளின் ஆழமான கருத்துக்களையும் அவர் அடியார்களுக்கு எடுத்துக் கூறத் தவறவில்லை.

மேலும் இயற்கை வழிபாடான சூரியவழிபாட்டை எல்லோரும் தினமும் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை இரண்டு அம்மையார்களும் குறிப்பிட்டுக் கூறியது சிறப்பாக அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஒரு சமுதாயத்தினதோ, ஒரு நாட்டினதோ, சீரானதும், சிறப்பானதுமான இயக்கத்திற்கு எல்லா வகையான தொழில்களும் மிக அவசியம் என்பது இன்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது

கிராமப்புறங்களில் சுடும் வெய்யிலிலும், குளிரிலும் கஷ்டப்பட்டு உழைக்கும் ஏழை விவசாயிகள் இன்றும் மனித வர்க்கத்தின் முதுகெலும்பாகவே கருதப்படுகின்றனர். நகரத்தைப் பொறுத்தவரை கீழ்மட்டத்திலிருந்து, செயற்பட்டுக்கொண்டிருக்கும் நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தொடக்கம் உயர்மட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் வரை எல்லோருடைய கடமைகளும் அன்றாட இயக்கத்திற்கு அவசியமானதாகவே கருதப்படுகிறது. தெய்வத்திற்கு அடுத்தபடியாக வைத்து மதிக்கப்படுகின்றவர்கள் எனக் கூறக்கூடிய வைத்தியர்கள் சேவையையும் நாம் மறந்துவிட முடியாது. இவ்வாறு ஒவ்வொரு தொழிலிற்கும் அந்தந்த துறையைப் பொறுத்தவரை அதற்கு தனி முக்கியத்துவமும் சிறப்பும் இருக்கிறது இதனைத்தான் ஆங்கிலத்தில் the dignity of labour என்று கூறப்படுகிறது.

இத்தொழில்கள் ஒவ்வொன்றும் அந்தந்த தொழில்களுக்குரிய தர்மத்தின்படி செயற்படுத்தப்பட வேண்டுமென்பது இன்று மிகமுக்கியமாக உணரப்பட்டுள்ளது. ஏனென்றால் தொழில் கொள்வோர் தர்ம நெறியின்படி தங்கள் தொழில்களில் ஈடுபடும் பொழுதுதான் மனித வர்க்கத்தின் அன்றாடச் செயற்பாடுகளும் சுமுகமாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றப்பட்டு தனிமனிதன் ஒவ்வொருவரும் திருப்தியான வாழ்க்கையை வாழமுடியும்.

தற்கால உலகில் தனிமனிதனது ஆத்மீகச் செயற்பாட்டை விட ஒவ்வொரு மனிதனும் தங்கள் தங்கள் தொழில்களில் கடைப்பிடிக்கின்ற தொழில் தர்மமே முக்கியமானது என்பதை நாம் கூறவேண்டியுள்ளது. தொழிலில் ஈடுபடுகின்றவர்களுடைய நேர்மையற்ற தன்மை, பாரபட்சம், அதிகாரத்துஷ்பிரயோகம் மற்றும் லஞ்சம், ஊழல் போன்ற செயற்பாடுகளால் அன்றாடம் மக்கள் அநுபவிக்கின்ற துன்பங்களும் கஷ்டங்களுமே இன்று பெரிய பிரச்சனையாக மாறிவருகின்றது

தொழிலின் தர்மத்தைக் கடைப்பிடிக்காது மற்றவர்களுக்கு துன்பத்தை விளைவிக்கின்ற ஒருவனது ஆத்மீக ஈடுபாட்டை நிச்சயமாக இறைவன் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. கதிர்த்தம்பி சுப்பிரமணியம்
(வலைத் தோட்டம் கரணவாய் தெற்கு)

உரிமையாளர்
(வளர்பிறை பட்டுச்சேலை, சங்கானை)

திரு. மா. நாகலிங்கம்
(சக்தி வெதுப்பகம், பத்தமேனி)

திரு. ந. கந்தையாபிள்ளை
(இளைப்பாறிய லிகிதர், அச்சுவேலி)

திரு. Dr. V. பாலகிருஷ்ணன்
(முருகந்தன் வைத்தியசாலை, அச்சுவேலி)

திரு. P. சாந்தரூபன்
(கிராம உத்தியோகத்தர் தம்பாலை / கதிரிப்பாய்)

திரு. கு. கதிரைமலைநாதன்
(கிராம உத்தியோகத்தர், பத்தமேனி)

திரு. க. கணபதிப்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர், மாவடி வளவு பத்தமேனி)

திரு. க. நடராசா
(இளைப்பாறிய ஆசிரியர் இமையாணன்)

திரு. கு. இரவீந்திரன்
(ஆசிரியர் யாழ் / தொண்டைமானாறு வீ. ம. வி.)

திரு. க. இரத்தினசிங்கம் I.P.
(கிராம உத்தியோகத்தர், கரணவாய் மத்தி)

திரு. பா. இராசேந்திரம்
(கிராம உத்தியோகத்தர், கெருடாவில் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி இ. வல்லிபுரம்
( ஆசிரியை புனித திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி )

திரு. கா. இராமலிங்கம்
( ஆசிரியர் கரணவாய் மத்தி, கரவெட்டி )

திரு. சி. தங்கவேல்
( இயக்குனர் கேம்பிரிச் கல்வி நிறுவனம், நவிண்டில் )

திரு. த. முத்துச்சாமி J. P.
( வல்வெட்டி, வல்வெட்டித்துறை. )

திரு. க. அரியரெட்ணம்
( கதிர்த்தொலைத் தொடர்பு நிலையம், வல்வெட்டி. )

திரு. ஞா. இராமச்சந்திரன்
( இயக்குனர் ரலன்ற் கல்வி நிலையம், கரவெட்டி. )

திரு. க. கிருபாகரன்
(சந்தைவீதி, உடுப்பிட்டி.)

திரு. வ. த. இன்பராசா
( வல்வெட்டி )

அதிபர் அ. த. க. பாடசாலை
( கம்பர்மலை )


திரு. K. இராமநாதன்
( சத்திரவல்லை, கம்பர்மலை. )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# முருகன் பாமாலை



ஈராறு செவிகளில் நான் சொன்ன வார்த்தைகள்
எள்ளளவும் கேட்கவில்லையோ!
இப்புவியில் நீயல்லால் வேறு துணை காண்கிலோம்
இன்பமயமான முருகா
இரந்துருகும் அடியவர் பெருந்துயர் களைந்திட
இசையாத விந்தையென்னே
ஈசனுக்கு உபதேசம் செய்த குருநாதனே
இணையில்லா அருட்சோதியே
கூர்கொண்ட வேல்கொண்டு சூரனை மாய்த்திட்டுக்
குஞ்சரியை மணந்த பின்பு
குறமாது வள்ளியையும் மறவாது ஆட்கொண்ட
குன்றினில் அமர்ந்த குமரா!
சோர்வுற்றுத் துணையற்றுத் துன்புறும் எமைக்காக்கத்
துதி செய்து அடிபணிந்தோம்
சீர் பெற்ற நல்லையிற் சித்திரத் தேருறும்
சின்மயானந்த சந்நிதிக் குமரவேலோ!

○ சி. மயில்வாகனம் ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

# அர்ச்சுனனின் தீர்த்த யாத்திரை

சிவத்திரு வ. குமாரசாமிஐயர்

அந்தணர்கள் புடைசூழ, அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை புறப்பட்டான். ஆலயங்கள் பலவற்றைத் தரிசித்தும், புண்ணிய நதிகள் பலவற்றில் நீராடியும், மலைகள் காடுகள் என்பவற்றைக் கடந்தும், கங்கை உற்பத்தியாகும் இடத்தை அடைந்தான். கங்கைக் கரையில் தங்கியிருந்து கங்காஸ்நானம் செய்ய விரும்பினான். கங்கையில் நீராடும் பொருட்டு இறங்கியவனை, நாகலோக கன்னிகையான உலூபி என்பவள் கண்டாள். அர்ச்சுனனின் மீது மிக்க அன்பு கொண்டவளாய், அவனை நாகலோகத்துக்கு அழைத்துச் சென்றாள். நாகர் வாழும் உலகை அடைந்த அர்ச்சுனன் "நீயார்? என்னை எதற்காக இங்கு அழைத்து வந்தாய்?" என்று வினாவினான். அப்பொழுது உலூபி, "மன்னா இது நாகர் வாழும் நாகலோகம், எனது தந்தை நாகர்களின் மன்னன். உம்மீது நான் மாறாத அன்பு கொண்டு இங்கு அழைத்து வந்தேன். என்னைத் தாங்கள் மணந்து கொள்ள வேண்டும்" என்று மொழிந்தாள். அர்ச்சுனனும் அவளது வேண்டுகோளுக்கு இணங்கி அவளை மணந்து இவ்வாறாக நாகலோகத்தில் இருந்தான். இதனால் உலூபி ஓர் அழகிய ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். "அரவான்" என்பது அம்மகவின் பெயராகும். இதன் பின்னர் அர்ச்சுனன் அவளிடம் விடைபெற்றுத் தீர்த்த யாத்திரையைத் தொடர்ந்தான்.

தென்திசை நோக்கி யாத்திரை செய்து, கோதாவரி, காவேரி போன்ற புண்ணிய நதிகளில் நீராடி மணலூரை அடைந்தான். அந்நாட்டின் பாண்டிய இளவரசியைக் கண்டு மணம் செய்ய விரும்பி அவளின் தந்தையை அணுகி அநுமதி கேட்டான். அப்போது மன்னன் அவன் யாரென்பதனைக் கேட்டறிந்து, மகிழ்வு கொண்டு "அர்ச்சுனா! எனது புதல்வி சித்

திராங்கதை எனக்கு ஒரேயொரு மகளாவாள். எனக்குப் பின் இந் நாட்டை ஆள ஒரு மன்னன் வேண் டுமல்லவா? எனவே சித்திராங் கதையை நீ மணம் செய்வதாற் பிறக்கும் மகனை எனக்கு நீ தர வேண்டும். இதற்குச் சம்மதமானால் நீ எனது மகளை மணந்துகொள் ளலாம்'' என்று கூறினான். இந் நிபந்தனையை ஏற்றுக் கொண்ட அர்ச் சுனன் சித்திராங்கதையை மணந்து கொண்டான். பின்னர் மேலும் தென்திசை நோக்கி யாத்திரை செய்தான். தென்சமுத்திரக் கரை யில் இருக்கும் ஐந்து புண்ணிய தீர்த்தங்களில் நீராடச் சென்ற போது அதில் யாரும் இறங்கி நீராடாமல் இருப்பதனைக் கண்டு அதன் காரணத்தை வினவினான். அங்கிருந்த ரிஷிகள் அத்தீர்த்தங் களில் ஐந்து முதலைகள் இருப்ப தனால் எவரும் இறங்கி நீராடு வதில்லை என்பதனைத் தெரிவித் தனர்.

இவற்றைச் செவிமடுத்த அர்ச் சுனன், முதலாவது தீர்த்தத்தில் இறங்கியதும் அவனை அக்குளத் திலிருந்த முதலை பற்றிப்பிடித் தது. மிகவும் பலம் பொருந்திய வனான அர்ச்சுனன் முதலையைப் பிடித்து இழுத்துக் கரையிற் சேர்த் தான். கரையை அடைந்ததும் அம் முதலை பெண்ணாக மாறியது. அர்ச்சுனன் ஆச்சரியத்துடன் அவளை வினவ அப்பெண் ''பெரு வீரரே நாங்கள் ஐவரும் தேவ லோக மாதர்கள். முனிவர் ஒரு வரின் சாபத்தால் ஐவரும் ஐந்து முதலைகளாக இத்தீர்த்தங்களில் இருக்கிறோம். என்னைப் பெண் ணாக்கியது போன்றே மற்றைய நால் வரையும் கரையேற்றிக் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள். வேண்டுதலை நிறை வேற்றும் பொருட்டு அர்ச்சுனன் மற்ற நான்கு தீர்த்தங்களிலும் இறங்கி நால்வரையும் கரைசேர்த் தான். ஐவரும் அவனை வணங்கி விடைபெற்றனர். அர்ச்சுனன் தீர்த்தங்களில் நீராடி மீண்டும் மணலூரை அடைந்தான்.

மணலூரில் சித்திராங்கதை யுடன் தங்கி வாழ்ந்து வந்தான். சித்திராங்கதைக்கு ''பப்ருவாக னன்'' என்னும் ஆண் மகவு பிறந் தது. மன்னனுக்கு வாக்களித்தபடி பப்ருவாகனனை அவனுக்குத் தத் தமாகக் கொடுத்துச் சித்திராங்கதை யிடமும் விடைபெற்றுக் கேரள நாட்டை அடைந்தான். திருக் கோகர்ணத்தைத் தரிசித்து மேற் குக் கரையில் இருக்கும் பலதலங் களைத் தரிசித்துப் ''பிரபாச தீர்த்தத்தை'' அடைந்தான். அதில் நீராடித் துவாரகை சென்று கண் ணபிரானைத் தரிசிக்க விரும்பி னான். கண்ணனை நினைத்ததும், அவனது சோதரியான சுபத்திரை யின் நினைவும் அவனுக்கு ஏற் படலாயிற்று. சுபத்திரையின் அழ கினைக் கேள்விப்பட்டிருந்து அவளை நேசித்திருந்த அர்ச்சுனன் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவளைக் காண விழைந்தான். ஒருவரும் அறியாவண்ணம் தனது உருவை மாற்ற விளைந்த அர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவி நூதன் போன்று தலையை மொட்டையடித்துக் காவியுடை அணிந்து, கழுத்தில் உருத்திராக்க மாலைகளை அணிந்து, கையில் கமண்டலம் ஏந்தி உருமாறினான். பின்னர் கண்ணபிரானை நினைந்து தியானத்தில் ஆழ்ந்தான். அர்ச்சுனனின் மனோநிலையை அறிந்து கொண்ட கண்ணன், உடனே துவாரகையை விட்டுப் பிரபாசதீர்த்தக் கரையில், அர்ச்சுனனைச் சந்தித்தார். கண்ணபிரானைக் கண்டதும், அர்ச்சுனன் மிக்க மகிழ்வு பொங்க எழுந்து அவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். எல்லோரினதும் நலத்தை விசாரித்த கண்ணபிரான் தீர்த்த யாத்திரை வரக்காரணம் என்னவென வினவினார். அர்ச்சுனன் நடந்தவற்றை எடுத்துக் கூறித் தனது மனவிருப்பையும் தெரிவித்துக் கொண்டான். அப்படியாயின் துவாரகைக்கு வந்து தங்கியிருக்கும்படி கண்ணன் கேட்டுக் கொண்டான். அதற்கு அர்ச்சுனன் தீர்த்தக் கரையிலேயே தான் தங்கியிருக்க விரும்புவதாகக் கூறினான். கண்ணன் விடைபெற்றுச் சென்றார்.

கண்ணபிரான் அர்ச்சுனனைச் சந்தித்துத் திரும்பிய சில நாட்களின் பின்னர் யாதவமக்களால் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படும் கிரிபூஜை என்னும் விழாவுக்குரிய காலம் வந்தது. யாதவ மக்கள் எல்லோரும் மிக்க மகிழ்வுடன் மலையடிவாரத்தை அடைந்து, மலையை அலங்கரித்துப் பாடியும் ஆடியும் மகிழ்ந்தனர். இசையாரவாரத்துடன் இவ்விழாப் பொலிந்தது. அடியவர்களுடன் ஆடல் செய்தனர். பலர் குடும்பத்தவர்களும் சேர்ந்து வந்து இவ்விழாவிற் கலந்துகொண்டனர். பலராமர், கண்ணன் சாத்யகி முதலிய யாதவ குலச் செம்மல்களும் வந்து மகிழ்ந்திருந்தனர். பலராமர் தம் சகோதரியாகிய சுபத்திரையையும் உடன் அழைத்து வந்திருந்தார். கண்ணபிரான் யாருமறியா வண்ணம் அர்ச்சுனனை அங்கு வரவழைத்திருந்தார். நன்கு அலங்காரம் செய்து எழிலுருவாக விளங்கிய சுபத்திரையை அர்ச்சுனன் கண்டான். சுபத்திரையின் அழகு அவனைப் பித்தனாக்கியது. கண்ணபிரானுடன் இளம் துறவிக் கோலத்துடன் இருந்த அர்ச்சுனன் கிரிவலம் வந்து, எங்கும் உலவி மற்றோருடனும் சேர்ந்து களித்திருந்தான். சுபத்திரையைக் கண்டு மனம் பித்தாகிய நிலையில் கலங்கிய அர்ச்சுனனின் மனோநிலையைப் புரிந்து கொண்ட கண்ணபிரான் அவனுக்கு உதவிபுரிய விழைந்தார்.

அர்ச்சுனனை நோக்கிக் கண்ணபிரான், "அர்ச்சுனா! உன்மனம் நிலைதடுமாறி அலைகிறது. எனது தங்கையை மணந்து கொள்ள விருப்பமாயின் அதனை முதலில் உனது அண்ணனாகிய யுதிஷ்டிரருக்குத் தெரிவிக்க வேண்டும்." என்றுகூறினார். அர்ச்சுனன் அதனை ஏற்றுக்கொண்டதும், கண்ணபிரான் யுதிஷ்டிரருக்கு விடயத்தைத் தெரிவிக்கத் தூதுவனை அனுப்பி வைத்தார். தூதுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரப் பிரஸ்தம் அடைந்து, செய்தியை அறிவித்ததும் யுதிஷ்டிரர், தாய் குந்திதேவியுடனும் மற்றைய பாண்டவர்களுடனும் கலந்தாலோசனை செய்தார். பின்னர் அர்ச்சுனனின் விருப்பத்தை நிறைவேற்றுமாறு கண்ணபிரானுக்குச் செய்தி அனுப்பினார். யுதிஷ்டிரரின் அனுமதி கிடைத்ததும் கண்ணபிரானும் அர்ச்சுனனும் கலந்து ஆலோசனை செய்தனர். கண்ணபிரான் சுபத்திரையைக் கந்தர்வ முறைப்படி மணப்பதே நடைபெறக் கூடியது எனக் கூறி, இனிச் சந்தர்ப்பம் வரும் வரை காத்திருக்க வேண்டும் என்று கூறியதுடன் அர்ச்சுனனைத் துவாரகைக்கு வந்து தங்கியிருக்கும்படியும் கேட்டுக் கொண்டார். சுபத்திரையை மணக்க அனுமதி கிடைத்தமையால், அர்ச்சுனனும் துவாரகைக்குச் செல்ல உடன்பட்டான். கண்ணபிரான் அர்ச்சுனனிடமிருந்து விடைபெற்றுச் சென்றார். அர்ச்சுனன் துறவிக் கோலத்துடனே துவாரகைக்குச் சென்று சோலை ஒன்றில் தங்கியிருந்தான். துறவி ஒருவர் சோலையில் அமர்ந்திருப்பதனைக் கண்ணுற்ற யாதவ மக்கள் அவரைத் தரிசிக்கச் சென்றனர். அவருடன் உரையாடி அவர் பல தலங்களைத் தரிசித்துப் புண்ணிய நதிகளில் நீராடித் துவாரகைக்கு வந்திருப்பதனை அறிந்து கொண்டனர். பெருந் தவசியான அவரைத் தக்கபடி உபசரித்து அவரின் ஆசிகளைப் பெறவிழைந்த யாதவ மக்கள் பலராமருக்கு அவரைப் பற்றித் தெரிவித்தனர். பலராமரும் துறவியாரைத் தரிசித்து, அவரை எங்கு தங்க வைக்கலாம் எனயோசனை செய்தார். அவ்வேளையில் மாயக் கண்ணனும் அவ்விடம் வந்து சேர்ந்தார். அவரும் துறவியைத் தரிசித்து ஏதுமறியார் போல நின்றிருந்தார். பலராமர் அவருடன் கலந்தாலோசிக்க அவர் பெரியவரான நீங்களே முடிவு செய்யுங்கள் என்று கூறினார். இதனாற் பெரிதும் மகிழ்வு கொண்ட பலராமர் யோசனை செய்து சுபத்திரையின் கன்னிமாட நந்தவனத்தில் துறவியைத் தங்கச் செய்வதென முடிவுசெய்தார். மாயக் கண்ணன் உள்ளத்துள் மகிழ்ந்து ஆனால் வெளியே விருப்பமற்றவர் போல் நடித்து "துறவி இளம் வயதுடையவராய் இருக்கிறார்" என்று ஆட்சேபித்தார். ஆனால் பலராமர் "அவரோ சிறந்த துறவியாக இருக்கிறார். அவரைத் தக்கமுறையில் உபசரிக்க வேண்டும்" என்று கூறிச் சுபத்திரை மாளிகையில் தங்க வைத்தார்.

(தொடரும்)

---

பிறரது குற்றங்களைப்பற்றி ஒரு போதும் பேசாதே. அவை எவ்வளவு கெட்டவை ஆனாலும் சரி. அதனால் எந்தப் பயனும் என்றும் விளைவதில்லை.
— சுவாமி விவேகானந்தர்

---

இரண்டு நிலைமையிலும் கடவுளை நினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மனிதனாக வாழ

○ சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் ○

இப்புவியில் மனிதனாகப் பிறந்த நாம் முதலில் மனிதனாக வாழப்பழகுதல் வேண்டும். மனித ரூபத்தில் மிருகமாக வாழ்தல் தகாது. எமது நாக்கு இருக்கிறதே அது மிகவும் பயங்கரமான ஆயுதம். முதலில் இனிமையாகப் பேசப் பழகுதல் வேண்டும். மற்றவர் மனம் நோகும்படியாக, புண்படும் படியாகப் பேசவே கூடாது. மனிதப் பண்புகளில் மிகவும் பிரதான மானது இது. மெத்தக் கவனமாகப் பேசுதல் வேண்டும்.

இந்தப் பண்பை நாம் நமக்கு ஏற்படுத்திக் கொள்வதற்கு உறு துணையாக விளங்குவது இறை பக்தியே. இறை நம்பிக்கை உள்ள வருக்குத்தான் பக்தி வரும். பக்தி பரவசமாகி இறைவனோடு இரண் டறக் கலந்து விடல் வேண்டு மென்ற ஆவல் மீதூரப் பெற்றவர் களே மனிதப்பண்புடன் வாழ முடியும்; வாழ்ந்திருக்கின்றார்கள்.

பெரியோரைக் கனம் பண்ணு தல், மூத்தோர் வார்த்தை கேட் டல், தாய் தந்தையர் சொற் கேட்டல், ஆசிரியருக்குக் கீழ்ப்படி தல், மூத்தோர் மற்றும் அறிஞர் பெருமக்களைக் கண்டால் அவர் களுக்கு மதிப்புக் கொடுத்தல் போன்ற இன்னோரன்ன பழக்க வழக்கங்களை நாம் கடைப்பிடித் தல் நம் நல்வாழ்வுக்கு மிக இன்றி யமையாதது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தமது சுய அனுபவத்திலேயே இறைவனைக் கண்டுற்றவர். இறை தியானத்தின் மூலம் கட வுளைக் காணலாம் என்று வலி யுறுத்திக் கூறுகின்றார். ஓரிடத்தில் அமைதியாக இருந்து ஐம்புலன் களையும் ஒடுக்கி மன ஒருமைப் பாட்டுடன் வழிபட்டால் இறை வனைக் கண்ணாரக் கண்டு களிக் கலாம். இது அவர் கண்ட ஞான அநுபவமாகும்.

கடவுள் நம்பிக்கை இல்லாத ஒருவர், 'கடவுள்' என்று ஒரு வர் இருக்கின்றார்; அவர் தான் உலகை இயக்குகின்றார்; அவ னன்றி ஓரணுவும் அசையாது என்று கொள்கையுள்ள ஒருவரி டம் பின்வருமாறு கேட்டார்.

"கடவுள் இருக்கின்றாரா? அவரை எனக்குக் காட்ட முடியுமா? அவர் எங்கே இருக்கின்றார்? எந்த திக்கை நோக்கிய வண்ணம் இருக்கின்றார்?" என்று பல கேள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயனை அறுக்கிக் கொண்டு போனார். அதைக் கேட்ட அவர் சிரித்துக்கொண்டே, ''நாளைக்கே உமக்குக் கடவுளைக் காட்டுகின்றேன்'' என்று ஒப்புக்கொண்டார். அவரும் முழு நம்பிக்கையுடன் காத்திருந்து எப்பொழுது விடியும்? '' என்றிருந்தவர் மறுநாள் விடிந்ததுமே ஓடோடி வந்தார். எங்கே கடவுளைக் காட்டுகின்றீர்களா?'' என்று அவசர அவசரமாக அங்கலாய்த்தபடி கேட்டார். அவருடைய அவசரத்தையும் ஆசையையும் கண்ணுற்ற அவர், '' இப்படி அவசரப்படுகின்றாயே?'' சரி, இப்போது உன்னிடம் கடவுள் நேரே வந்து '' அன்பனே! உனக்கு முத்தி தருகின்றேன். என்னோடு வருகிறாயா? என்று கேட்டால் நீ புறப்படத் தயாரா? '' அதற்கு அவர், அதெப்படி முடியும். என் மனைவி, மக்கள், மாடு, மனை, வீடு வாசல், பொன் பொருள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு எப்படி வரமுடியும்?'' என்றார்.

'' பார்த்தாயா! எல்லாப் பொருள்கள் மீதும் பற்று வைத்துக் கொண்டு உன்னால் எப்படி இறைவனைக் காண முடியும்? அவனை எப்படி அடைய முடியும்?'' என்றார் அவர். '' இன்று கடவுளைக் காட்ட மாட்டீர்களா?'' என்று மீண்டும் அவசரப்பட்டார்.

''சரி! இதோ காட்டுகின்றேன்' என்றவர் ஒரு பாத்திரத்தில் பசுப்பால் எடுத்து வந்து அவருக்கு முன்னே வைத்தார். '' தம்பி! இது என்ன?'' என்றார். அதற்கு அவர், '' இது என்ன பசுப்பால் தானே!'' என்றார். ஆமாம் பசுப்பால்தான்! '' இந்தப்பாலில் தயிர், மோர், நெய் என்று பலவும் எடுக்கலாம் அல்லவா?'' ஆம் எடுக்கலாம். அப்போது அவர், '' ஏன் இப்படிக் கேட்கின்றீர்கள்? '' என்றார். '' பொறும் அவதிப்பட வேண்டாம்! இப்பாலில் தயிர், மோர், நெய் இருக்கிறது. ஆனால் இப்போது உமது கண்களுக்குத் தெரிகின்றதா? இல்லை அதே போலத்தான் கடவுளும் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து பரிபூரணானந்தராக விளங்குகின்றார். உமது ஊனக் கண்களுக்குத் தெரிவதில்லை. அதற்கு ஞானக் கண் வேண்டும் '' என்றார்.

'' அது சரி! என்றாலும் ......'' என்று இழுத்தார். உடனே ஒரு குத்துவிளக்கை எடுத்து வரச் செய்து, அதில் எண்ணெயை விட்டுத் திரி போட்டுத் தீபத்தை ஏற்றினார்.

''அன்பா! இந்த விளக்கு எந்தப் பக்கம் பார்த்து எரிகிறது? '' என்றார். வந்தவர் ''திரு திரு'' வென விழித்தார். விளக்கு ''எரிகிறது. எல்லாப்பக்கமும் தான் வெளிச்சம் தெரிகிறது. எந்தப் பக்கம் பார்த்து எரிகிறது என்று சொல்ல முடியவில்லையே '' என்றார்.

'' தீபம் எரிகிறது. ஒளி பிறக்கின்றது. ஆனால் எந்தத் திசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கினாரின் றது என்று சொல்ல முடியாதிருக்கின்றது. அது போலவேதான் இறைவனும் ஒளிக்குள் ஒளியாய், காற்றோடு காற்றாய், நெருப்புக்குள் நெருப்பாய், இரண்டறக் கலந்திருக்கின்றான். அவனது கருணையை எடுத்தியம்ப முடியாது.

பாலில் நெய் இருக்கின்றது. அதனை இல்லை என்று சொல்ல முடியுமா? அதுபோலத்தான் இறைவனும் எல்லா இடமும் பரந்து விரிந்து ஒளிர்ந்து கொண்டிருக்கின்றான். அவனது அருட்பிரகாசத்துக்கு எல்லையே கிடையாது. அந்த ஒளியினைத் தடுக்கவும் முடியாது. இப்போது புரிகிறதா?" என்றார். அவரும் ஒப்புக்கொண்டார்.

ஒரு பொருளைப் பார்க்கின்றோம். அதனை உருவாக்கிய ஒருவன் இருக்கத்தான் செய்வான். அதேபோல இந்த உலகத்தையும் படைத்த இறைவன் ஒருவன் இருக்கின்றான்தான். "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்ற மாதிரி அவன் நம்மையெல்லாம் ஆட்டுவிக்கின்றான். நாங்கள் ஆடுகின்றோம். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவனை நாம் ஏத்தி ஏத்தித் தொழவேண்டியது நமது தலையாய கடமையும்.

அதற்காகக் கடவுள் இல்லை என்று வாதிடாமல் வீணே காலத்தைக் கழிக்காமல் உண்மையாய் வாழ்ந்து, நேர்மையாய் நடந்து மனிதப் பிறவி எடுத்த பயனை அனுபவித்தல் வேண்டும்.

உண்மைக்கு என்றும் அழிவில்லை. நாம் எப்போதும் உண்மையாய் வாழ்ந்து பழகவேண்டும். அரிச்சந்திரன் உண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தின் சத்தியத்தைக் கடைப் பிடித்து வாழ்ந்து, புகழின் உச்சிக்கே சென்று விட்டான்.

அதுபோலவே நாமும் கண்ணைத் துயின்று அவம் காலத்தைப் போக்காது விண்ணுக்கொரு மருந்தாகவும் வேத விழுப்பொருளாகவும் விளங்கி, கண்ணுக்கு இனியானாக விளங்குகின்ற இறைவனைப் பாடிக் கசிந்து உள்ளம் நெக்குருகி வழிபடவேண்டும். அப்போதுதான் சிவனைக் கண்டு களிக்க முடியும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக் குய்க்கும் வேதம் நான்கினும் மெய்ப்பொருளாக விளங்குகின்ற நாதனுடைய நாமத்தைச் சொல்லி நற்கதி அடைவோமாக.

இறைவனிடம் நம்பிக்கை இல்லாததுதான் மனிதன் படும் துன்ப துயரங்களுக்கு எல்லாம் காரணம்.

குற்றத்தை மறைத்தல் கோழைத்தனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகவான்

# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருவாய்மலர்ந்து அருளியவை

## நம்பிக்கை, பக்தி, சரணாகதி.

— திருமதி செ. அருளானந்தம் —

ஒரு சலவைத் தொழிலாளி, ஒரு பக்தனை வெகு கடுமையாக அடிக்கும்போது, பக்தன் "நாராயணா! நாராயணா!" என்று மட்டும் சொல்லிக்கொண்டிருந்தான். அப்போது, வைகுண்டத்தில் லெட்சுமிதேவியுடன் வீற்றிருந்த ஸ்ரீமந் நாராயணனுடைய காதுதனில் இந்தச் சப்தம் விழுந்தது. அவர் எழுந்திருந்து பக்தனைக் காப்பாற்றுவதற்காகப் புறப்பட்டு வந்தார் ஆனால் அவர் இரண்டு மூன்று அடி தூரம் சென்றதும் திரும்பிவந்து ஆசனத்தில் அமர்ந்தார். இதைக்கண்ட லெட்சுமிதேவி "இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி வரக்காரணம் என்ன?" என்று கேட்டாள் "நான் போகவேண்டிய அவசியம் இராது போயிற்று; பக்தனும் சலவைத் தொழிலாளி ஆகி விட்டான். அவன் தானே தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணித் தன்னை அடித்தவனைத் திருப்பி அடிக்கத் தொடங்கி இருக்கிறான். ஆதலால் அந்த நான் போக வேண்டிய அவசியம் இல்லை" என்று பதில் சொன்னார். முற்றிலும் சரணாகதி செய்தாலொழிய ஈஸ்வரன் உன்னைக் காப்பாற்ற மாட்டான்.

தனது கோபாலனைப்பற்றிய செய்தி ஒன்றும் அறியாது இருந்த யசோதை ஒரு சமயம் இராதையிடம் வந்து "கோபாலனுடைய சமாச்சாரம் ஏதாவது தெரியுமா? என்று கேட்டாள் அத்தருணத்தில் இராதை பக்தி பரவசப்பட்டிருந்தபடியால் யசோதை சொன்னது கேட்கவில்லை தன் நினைவு வந்ததும், தனக்கு முன்னால் நந்தன் மனைவி உட்கார்ந்திருப்பதைக் கண்டு, இராதை அவளுக்கு தெண்டனிட்டாள். பிறகு, அவள் அங்கு வந்தகாரியத்தை இராதை வினவ, கோபாலனைத் தேடி வந்ததாகச் சொன்ன யசோதையை

உண்ணும்போது மௌனமாயிருக்கப் பழகு.

நோக்கி, "அம்மா! உமது கண்களை மூடிக்கொண்டு கோபாலனுடைய உருவத்தைத் தியானித்தால் அவனைக் காண்பீர்" என்றாள். உடனே யசோதை கண்களை மூடிக்கொண்டாள். பிரேமஸ்வரூபியான இராதை தனது திவ்ய சக்தியை யசோதையினிடத்திற் செலுத்திய மாத்திரத்தில், யசோதை கோபாலனைப் பார்க்கக்கூடியவளானாள். அப்போது அவள் இராதையைப் பார்த்து "அம்மணி! நான் கண்களை மூடிக்கொள்ளும் போதெல்லாம் எனது பிரியமான கோபாலனைக் காணும்படியான வரம் எனக்கு நீ தர வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

ஸ்ரீ இராமச்சந்திரர் வனவாசம் பண்ணுகையில், ஒரு நாள் தமது அம்பையும் வில்லையும் தரையில் நிறுத்திவிட்டுத், தாக சாந்தி செய்து கொள்வதற்காகப் பம்பா ஸரஸ் என்ற தடாகத்தில் இறங்கினார். மேலே ஏறி வந்து பார்க்கையில் தமது வில் ஒரு தவளையை ஊடுருவிச் சென்றதன் காரணமாக அத்தவளை இரத்தத்தால் நனைந்திருப்பதைக் கண்டார். ஸ்ரீ இராமபிரான் இதற்குப் பெரிதும் வருந்தித், தவளையைப் பார்த்து, "ஏ தவளையே! நீ ஏதாவது சப்தம் செய்திருக்கக் கூடாதா? அப்போது நீ இருப்பதை நான் தெரிந்துகொண்டிருப்பேன். உனக்கு இந்தக் கதியும் நேர்ந்திராதே" என்றார். ராமா! எனக்கு ஏதாவது ஆபத்து நேரும் போது, இராமா! என்னைக் காப்பாற்று என்று நான் சொல்வேன். ஆனால் நீயே என்னைக் கொல்லும் போது, யான் யாரிடம் எனது குறையை முறையிட்டுப் பிரார்த்திப்பது"? என்று தவளை பதில் சொல்லிற்று.

[ தொடரும் ......

## வாழ்க்கை

ஆமைகள் இரண்டு சந்தித்துக் கொண்டன. "வரவர உலகம் மோசமாகி விட்டது. ஏன் தான் இப்படி அவசரக்காரர்கள் ஆகி விட்டார்களோ!

இப்படி தலை தெறிக்க ஓடுகிறார்களே, எல்லோரும் முட்டி மோதி விழப் போகிறார்கள்" என்றது ஒன்று.

"ஆமாம் இப்படி அவசரப்பட்டு என்ன சாதிக்கிறார்கள். அல்பாயுசில் போய் விடுகிறார்கள். நம்மைப்போல் முந்நூறு, நானூறு ஆண்டுகள் வாழ முடிகிறதா, இவர்களால், நிதானமாக இருந்தால் தானே நீடிக்கும் ஆயுள்"

உரம் செய்வது வைரார் செய்யார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு வழி நின்ற அடியார்கள் ஆற்றிய மக்கள் தொண்டு

திருமதி வசந்தா சுந்தரமணி

அடியார்கள் தத்தம் வாழ்வின் இடர்களில், கடமைகளில் இறையுணர்வின் உச்சங்களை வெளிக்காட்டியுள்ளனர். திருஞானசம்பந்த சுவாமிகள், இளையான்குடிமாற நாயனார், பூசலார் நாயனார் இவ்வாறு அடியார்கள் பலர் தமது அன்பின் திறத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த அடியார் கூட்டத்தினர் இறைவனுக்கு மட்டுமன்றித் தம்மைப் போன்ற அடியவருக்கும் அடியராக விளங்கினர். இவர்களது வாழ்வும் வரலாறும் எங்கள் சமய நெறியை வளர்த்தன. அவர்களது வழிபாடும் உலகநலம் கருதியதாகவே இருந்துள்ளது. திருஞான சம்பந்த சுவாமிகள் இறைவனிடம் தனக்காக எதையும் வேண்டாமல் உலகெங்கும் துயர் நீங்கி இன்பம் பெருக வேண்டும் என்று வேண்டினார். சம்பந்தர் சுவாமிகள் இறைவனிடம் ஒரு முறை நிதி வேண்டும் என வேண்டினார். தமக்காக வேண்டவில்லை. தம்மிடம் கேட்பவருக்குக் கொடுக்கப் பொருள் இல்லையே என்று துன்பப்பட்டார். உலக மக்களின் நலனுக்காகத் தேவாரங்கள் பாடி நோய், பிணி நீக்க இறைவனை வேண்டினார். செங்குன்றூரில் குளிர் சுரம் நீக்கியருளியும், திருவீழிமிழலையில் பஞ்சம் நீக்கக் காசு பெற்றும் மக்களுக்கு உதவி புரிந்தார். செல்வம் மிக்க இளையான்குடி மாற நாயனார் அடியார்களுக்கு அமுதளித்தலிலேயே தமது செல்வத்தின் பயனை அடைந்தார்.

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினு(ம்) மனத்து(ம்) மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.

என இறைவனுக்கும் அடியவருக்கும் உள்ள தொடர்பை எடுத்துக் கூறியுள்ளார் சம்பந்தர் சுவாமிகள்.

இயன்றளவு கூட்டு வழிபாட்டிற் கலந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுக்கரசு சுவாமிகளும் பஞ்சக் காலத்தில் சிவனடியார்களுக்குத் திருவமுது ஊட்டுவதற்காகச் சிவபெருமானிடம் படிக்காசு பெற்றார். பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் பிள்ளையை உயிர்ப்பித்தார். இதே போன்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும் முதலைவாய்ப்பிள்ளையை மீட்டருளினார். இவ்வாறாக நாயன்மார்கள் பலர் மக்களது நலன் கருதியே பல அற்புதங்களைச் செய்துள்ளனர். தொண்டாற்றியுள்ளார்கள். மக்கள் சேவையே மகேசன் சேவையாகச் செயற்பட்டார்கள். அடியவர் மீதும், ஆண்டவன் மீதும் அன்பு செலுத்தி ஆனந்தப் பெருவாழ்வினை எய்தினர். இவர்கள் கண்ட அன்பு நெறி எமது வாழ்க்கைக்கும் நெறியாக அமைந்து வழி காட்டுகின்றது.

## தன்னடக்கம்

மனம், வாக்கு, காயம் மூன்றையும் கட்டுப்படுத்துதல் தன்னடக்கம் ஆகும். அடக்கம் அமரருள் இருத்தும். பொறுமை அடக்கத்தின் ஒரு அம்சம். பொறுத்தார் அரசாள்வார். பொறுமை பொறுத்தவர் இன்னும் பொறுப்பர். தன்னடக்கம் விரதங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது. நல்லொழுக்கத்தின் சிகரம் தன்னடக்கமேயாம். அடக்கத்தால் பாவங்கள் நசியும். தன்னடக்கம் வலிமையைத்தரும். அடக்கமுடையவரைக் கடக்கக் கருதலாகாது. அறநெறிக்கும் ஆத்மீகத்துக்கும் அடக்கமே அவசியம். அடக்கத்தால் மனம் தூய்மை அடைந்து சாந்தி பெறும்.

இனிமையான பேச்சு, இரக்கம், விருப்பு வெறுப்பில்லாமை, கோபம் இல்லாமை, துவேஷமும் இல்லாமை, மன்னிக்கும் மனப்பான்மை, பொறுமை, அஹிம்சை, பணிவு, உபசரணை, நன்னடத்தை, வாய்மை, நேர்மை, மனவுறுதி எல்லாம் சேரத் தன்னடக்கம் உண்டாகும்.

தன்னடக்கம் உள்ளவன் ஆன்மசுத்தன். அவனிருக்கும் இடம் தபோவனம் போலாகும். அவனை நாடி நல்லவர்கள் வருவார்கள்.

உணவின் முன் கைகால்களைச் சுத்தம் செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

ஸ்ரீ க. சிவசங்கரநாதன் ஸ்ரீ

பிரார்த்தனைக்கு உள்ள சக்தி மகத்தானது. பிரார்த்தனை பல சமயம் அதிசயங்களைச் சாதிக்கிறது. பிரார்த்தனையை மனநூலோர் ஆராய்ந்திருக்கின்றனர். சிலவேளை நோயாளி ஒருவரின் நோயை மாற்ற முடியாதவேளை மருத்துவர் இது எம்மால் முடியாத விடயம் இறைவனால்தான் முடியும் என்று கூறிக் கைவிட்டு விடுவர். அவ்வேளை நோயாளிக்காகப் பிரார்த்தனை செய்து நோய் மாறியிருப்பதையும் காண்கிறோம் அறிகிறோம். யோகம், தியானம் இவற்றிற்கு அடுத்த நிலையில் எவ்வொருவரும் ஈடுபடக் கூடிய ஒரு சாதனை இருக்கிறதென்றால் அதுதான் பிரார்த்தனை. அதற்குத் தெளிவும் வேண்டும் ஓர் ஒருமைப்பட்ட உணர்வு, ஆழ்ந்த நம்பிக்கை தேவை. பிரார்த்தனை செய்யும் போது உள்ளே இருக்கும் ஏதோ ஒன்று உயிர் பெறுகிறது. புதிய உத்வேகம் ஏற்படுகிறது நீரில் ஏற்படும் அலைபோன்ற துடிப்பு. புறவுலகில் அதற்கேற்ற துடிப்பை உருவாக்குகிறது எனத் தத்துவ ஞானிகள் விளக்கியுள்ளார்கள்.

பிரார்த்தனையில் பாமரர்கள் முதல் வசதிபடைத்தோர், படித்தவர்கள் என்றபேதமில்லாது யாவரும் ஈடுபடலாம். பிரார்த்தனையில் ஈடுபாடுகொள்ளத் தெரிந்தவர்களுக்கு, நம்பிக்கை கொண்டவர்களுக்கு அது நல்ல பலனை அளிக்கிறது. அது ஓர் உலக நியதி, பிரபஞ்ச நியதி. இறைவழிபாட்டைப் போலப் பிரார்த்தனையும் எளிதான சாதனையாகும். அதற் காலத்தின் கிராமத்திலிருந்து உலக நாடுகள் வரை சமாதானத்திற்கும் மழை பெய்வதற்கும் உலகத்தலைவர்கள் ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழவும் பிரார்த்தனை செய்யும் போது அது பயன்படுகிறது. எம்மிடம் கொடுக்க ஒன்று மில்லாத போது பிரார்த்தனை செய்யுங்கள் ஏனெனில், பிறருக்குப் பிரார்த்தனையைக் கொடுப்பதைப் போல நல்ல பொருள் வேறில்லை பிறருக்காகப் பிரார்த்தனை செய்யும் போது அங்கே சுயநலம் இல்லை. பிறருக்காக உதவும் பெரிய இதயம் அங்கே நிலவுகிறது பெரியவர்களது ஆசிநமக்கு நலன்களைக் கொண்டு வருவது அந்த நியதியில் தான் அன்புடன் கருணையுடன், அளவு கடந்த ஈடுபாட்டுடன் எண்ணப்படும். எண்ணம் பிரச்சினைகளின் நல்ல முடிவாய் நன்மையாய் நம்மை வந்தடைகிறது பிரார்த்

☆ பிழை செய்தல் மனித இயல்பு. ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை என்பது போலக் கூறியும் உணர்வு. எதையோ தேடும் ஆழமான உணர்வு. தேவையின் அவசரம் அதற்கு அழுத்தத்தையும் வலிமையும் தருகிறது.

பிரார்த்தனை செய்வதற்குக் குறிப்பிட்ட நேரத்தைக் குறிப்பிட்ட இடம் ஒன்றைத் தெரிவு செய்து இருக்குங்கள் இந்தப் பழக்கம் அந்த இடத்தையும் நேரத்தையும் கண்டவுடன் இயல்பாக நம்மை அமைதியடையும் நிலைக்கு, பிரார்த்தனை நிலைக்கு, எளிதான நிலைக்கு அழைத்துச் செல்லும் என்று கூறுகிறார்கள். பிரார்த்தனையில் சொல் வேண்டுகோளைத் திரும்பத் திரும்பச் சொல்லும் போது அது வலிமையடைகிறது அது நாளடைவில் நம்பிக்கை பெறுகின்றது. மந்திர சக்தி பெறுகிறது. கோயிலின் நிலவும் சூழ்நிலையும் அதன் அமைப்பும் நம்மை ஒருவழிப்படுத்தும் சாதனங்களில் முதன்மை வாய்ந்ததாக அமைகிறது. திருநாவுக்கரசர் வழித்தலைப் புறமதம் சென்ற போது அவரின் தமக்கையாகிய திலகவதியார் தம்பியார் நிலையை எண்ணி வருந்தி இறைவனை வேண்டிப் பிரார்த்தித்தார் திலகவதியாரின் பிரார்த்தனையால் திருநாவுக்கரசர் சமணசமயத்தில் இருந்து வெளியேறி மீண்டும் சைவசமயத்தில் இணைந்தார். இறைவன் அருளாசியுடன் திருநாவுக்கரசர் இறைவனைப் பிரார்த்தனை செய்து திருமுறைகள் பல பாடியுள்ளார் நாவுக்கரசர் மீது சமணசமயத்தினர் பல துன்பங்களைச் செய்த போதெல்லாம் நாவுக்கரசர் இறைவனைப் பிரார்த்தனை செய்து பாடல்களைப் பாடித் தம் துன்பங்கள் நீங்கப் பெற்றார். திருஞானசம்பந்த சுவாமிகளும் நாவுக்கரசர் போன்று நோய்கள் நீங்கவும் இறந்த உயிரை மீட்கவும் பாடல்கள் பாடி அற்புதம் புரிந்தவர்கள் இவர்களது பாடல்களை இக்காலத்தில் பிரார்த்தனையிற் பாடிப் பயன் பெறுவோமாக.

### கொன்றால் பாவம் தின்றால் போகுமா?

புலால் உண்டவர்களை யமதூதர்கள் நரகத்தில் நிறுத்தி அவர்கள் உடல் தசையை அறுத்து அவர்கள் வாயில் வைத்து ஊட்டுவார்கள். அதை உண்டாலுந்தான் அவர்கள் கொன்ற பாவம் போகும்.

இதனை அருணகிரிநாதர் "புலைகொடுநாறு" எனத் தொடங்கும் திருச்செங்கப்பள்ளி திருப்புகழில் "இறைச்சி அறுத்து அயில்வித்து" என்று குறிப்பிடுகின்றார். எனவே கொன்ற பாவம் தன் உடம்பைத் தானே தின்றால் தான் போகும்

ஒருவரின் பேச்சிலிருந்து உள்ளப்பண்பை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைகளின் தொகுப்பும் சிறப்பும்

— செல்வி இ. நந்தகுமாரி — [ தொடர்ச்சி ...

11 ஆம் திருமுறையாக 40 பிரபந்தங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதனை இறைவன் முதற்கொண்டு நம்பியாண்டார் நம்பிரீறாக அடியார்கள் பன்னிருவர் அருளிச் செய்தனர். இவர்கள் பாடிய பிரபந்தங்களிலுள் 1388 திருப்பாடல்கள் உள்ளன. இதிலுள்ள முதலாம் தொகுப்பாகிய திருமுகப்பாசுரத்தினைத் திருவாலவாய் இறைவனே பாடியுள்ளார். இறைவனோடு காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமான்நாயனார், நக்கீரதேவர், கல்லாட தேவர், கபில தேவர், பரணர் இளம் பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி முதலியோர் இத்திருமுறையினை அருளிச் செய்துள்ளனர் இதில் முக்கியத்துவமானவற்றைப் பார்க்குமிடத்துக் காரைக்கால் அம்மையாரது பாடல்களில் திருவாலங்காட்டுத் திருநடனம் அடிப்படைப் பொருளாக எண்ணப்படுவதோடு, சுடுகாட்டுக் காட்சியில் தோன்றிய ஞானம், உள்ளம் உருக்கும் இனிய பாடலாகவும் இருக்கிறது. சேரமான் பெருமான் நாயனார் பாடிய பொன் வண்ணத்தந்தாதி இறைவன் புகழ் பாடுவதெல்லாம் வாழ்க்கைத் துயர் பற்றிலிருந்து விடுபடுவதற்கே யென்பதனோடு திருவாரூர் மும்மணிக் கோவையில் பெரும்பாலானவை இறைவனிடத்து மாறுபட மகளிர் காதல் கொண்டதாகப் பாடப்பெற்றவை. திருக்கைலாய ஞான உலாவில் சிவபெருமானே தலைவர். ஐயடிகள் காடவர்கோன் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோயிலைக் குறிக்கின்றது. இப்பாடல்கள் நிலையாமையை வற்புறுத்துவனவாய், வாழ்க்கையில் இறைபக்தியில் திரும்புமாறு அறிவுறுத்துவனவாய் அமைகின்றது.

சேக்கிழார் பெருமானார் அருளிய பெரிய புராணம் 12 ஆம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. இதில் 11 சருக்கங்களில் 4286 திருப்பாடல்கள். இவை யாவும் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்டவையாகும். சுந்தரமூர்த்தி நாயனாரைக் கதா நாயகனாகக் கொண்டு 63 நாயன்மார்களினதும் வரலாறு, அவர்களாற்றிய திருத்தொண்டு என்பன கூறப்

நாளாந்தம் ஏதாவது நல்ல அப்பியாசம் நல்லது.

படுகின்றன. இது அவர்கள் புகழ் பாடுவதையே விரும்பொருளாகக் கொண்டுள்ளது. இந்நூல் ஞானி களைப் பற்றிப் பேசும் ஞான நூல். தமிழ்ச்சுவை, பக்திச்சுவை நாடு வோர்க்குப் பெருங்காப்பியம். உல கியல் நெறி தேடுபவர்கட்கு உலகப் பொதுவுண்மைகளை உணர்த்தும் வாழ்க்கை நூல், வரலாற்றுண்மை களை நாடுவோர்க்குச் சிறந்த தொரு சரித்திர நூல். இதில் மெய்ப்பொருளியல்புகள் நிறைவாக உண்டு. நாற்பாதம், தேவாரச் சிறப்பு, பொருளியல்பு, அறத்தின் சிறப்பு, ஆட்சி முறை, நீதி முறை, பக்தி வைராக்கியம் போன்ற கருத் துக்கள் பல சொல்லப்பட்டுள்ளன.

இத் திருமுறைகளினது சிறப் பைப் பற்றி நோக்குமிடத்து, தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும் பெருமை தருவனவற்றுள் பன்னிரு திருமுறைகளும் பெரும்பங்கு வகிக் கின்றன. திருமுறைகளைப் பாடிய வருள் ஆலவாயிற் கோயில் கொண் டருளிய இறைவனும் ஒருவர் என்ப தனால் திருமுறைகள் தனிப்பெரும் சிறப்புப் பெறுகின்றன. இதுமட்டு மன்றி திருமுறைகளைப் பாடி யோர் தம்மை இறைவனே பாடு வித்தார் எனக் குறிப்பிடுகின்றனர். இத்திருமுறைகளை அருளியவர் கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு வர்ணங் களையும் சேர்ந்தவர்களாவர். இறைவன் எந்த வர்ணத்தவரென் றில்லாது அடியவரது அன்பர் களாகி ஆட்கொண்டார்.

சிவம் அளிப்பது இறைவனுக் கும், உயிர்கட்கும் உள்ள சம்பந்த மாகும். இச்சம்பந்தம் தோத்திரங் களால் அமைவதாகும். இதில் தலை சிறந்தவை திருமுறைகளே. அர்ச்சனை என்பது பாட்டேயா கும் என்று இறைவன் அருளியுள் ளார். தோத்திரங்கள் வெறும் மந் திரங்களோ, மொழிகளோ அல்ல. இவை உயிரின் உணர்ச்சிக்கு எழுச் சியினைத் தந்து இறைவன் பால் சேர்க்கவல்லன. தோத்திரங்கள் இல்லையேல் சமயம் இல்லை என லாம். திருமுறைகளைப் படிக்கும் போது நெஞ்சம் உருகும். அன்பு பெருகும். மனம் இளகும். தோத் திரங்களாய் அமைந்த திருமுறை கள் பல அற்புதங்களினைச் செய் துள்ளன. திருமுறைகள் தெய்வத் தன்மை மிகுதியாகக் கொண்ட வையே "பேயடையா பிரிவெய் தும்" எனும் திருமுறையைப் பக்தி சிரத்தையோடு ஓதியவருக்கு ஞானக்குழந்தை பிறந்தது. "அவ் வெவெல சந்தனச் சாந்தும்....." எனத்தொடங்கும் திருமுறையை அருளியவரை கொல்ல வந்த யானை வணங்கித் திரும்பிப் போனது. எனவே திருமுறைகள் படைத்தல், காத்தல், அழித்தல், ஆகிய முத் தொழிலைச் செய்தல் என்பதில் இருந்து இவற்றின் பெருமைகளை உரைக்க முடிகின்றதல்லவா? தாயு மான சுவாமிகள் இறைவனை நோக்கி, "சுவாமி தேவார முதலி கள் பாடியருளிய இனிய தேவாரங் களைக் கேட்டருளிய உமது திருச் செவிகள் நாயனைய அடியேன் பாடும் பாடல்களைக் கேட்குமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்பதன் மூலம் திருமுறைகளின் சிறப்பு வெளிப்படுவதனை நாம் அவதானிக்கலாம்.

இத் திருமுறைகளை ஓதுவதனால் நமது ஆன்மா தூய்மை நல்வாழ்வு கிடைக்கின்றது. இதுவாசி உள்ளங்களைத் தூய்மைப்படுத்துகிறது. கணநாதர் என்பவர் திருமுறைகளை ஓதியும், பிறர் செய்யும் நற்பணிகளை அடைந்தார் திருமுறைகள் நம்பிக்கையின் நோய் தொடு தீர்ப்பன. இவை நல்லொழுக்கத்தைக் கூறுவன. இறை வழிபாட்டினையும் இறைவனை அடையும் நெறிகளையும் கூறுவதோடு, உலக இன்பங்களை வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை அளிக்கும் தன்மை பெற்றன. மக்கள் மனத்தினை இறை இன்பத்தில் ஆழ்த்துவன.

திருஞான சம்பந்தர் உலகத்தாரைப் பார்த்து "உங்கள் பழி நீங்குவதற்காகத் தேவாரத்தை ஓதி உய்யுங்கள். இசை பாடுங்கள், அவற்றை எழுதி நல்லவராகுங்கள்" என்கின்றார். திருநாவுக்கரசர் "மனிதர்காள் நீங்கள் நிலைபெற்று நல்ல பதவியை அடைதல் வேண்டுமானால் அன்பு கனிந்த மனத்தோடு, கண்களில் நீர் வழிய இறைவன் புகழ் பாடுங்கள்" என்று அருளியுள்ளார்.

இவர்கள் காட்டிய வழிகளில் இன்று திருமுறைகள் ஆலயங்களிலும், இல்லங்களிலும் தினமும் ஓதப்பெற்று வருகின்றன. இறை வழிபாட்டிலும், எமது சமய நிகழ்ச்சிகளிலும் இத் திருமுறைகளினை ஓதுவது வழக்கமாகி விட்டது. இன்று கோயில்களில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் என்ற வரிசைக்கிரமத்தில் இப்பஞ்ச புராணங்கள் ஓதுவது வழக்கமாகி விட்டது. இப்பஞ்ச புராணங்களை ஓதினால் பன்னிரு திருமுறைகளை ஓதிய பயன் கிடைக்கும். எனவே இத் திருமுறைகளைத் தினமும் ஓதி நாமும் நற்பயன் பெறுவோமாக.

## துறவு

அந்தத் துறவி அந்த வழியே சென்று கொண்டிருந்தார்.

"ஐயோ! குளிர்கிறதே" என்று நடுங்கிக் கொண்டே அவன் இருட்டில் அருகில் அமர்ந்து கொண்டிருந்தான். அவர் நகைத்துக் கொண்டே சென்றார். சில மாதங்கள் சென்று அவர் திரும்பி வரும் பொழுது "ஆ! என்ன புழுக்கம்" என விசிறிக் கொண்டிருந்தான். அதற்கு அவர் நகைத்த படி சென்று கொண்டிருந்தார்.

உணர்ச்சியை வெளிக்காட்டுதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# சைவசமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள்

[ தொடர்ச்சி......

ஆய்வாளர் :- [illegible] கலாநிதி, கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.



இருக்கு வேதத்தில் ஆரியன் என்ற சொல்லுக்கு இன்னொரு பெயரான "பிராமணன்" என்பது பன்னிரண்டு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. பிராமணனை இகழ்ந்த சூத்திரனின் நாவை அறுத்துத் துண்டிக்க வேண்டும். (43) பிராமணனுக்கு ஒப்பாக நடந்த சூத்திரனைச் சம்மட்டியால் அடிக்க வேண்டும். (44) பிராமணனை இகழ்வோ டவனுக் குத் துன்பத்தை விளைவிக்கவோ செய்த சூத்திரனை, அதற்காக அவன் பயன்படுத்தும் அந்தந்த உறுப்புக்களை வெட்டித் துண்டிக்க வேண்டும். அதாவதான பிராமணப் பெண்ணைக் கெடுக்கின்ற சூத்திரனை அவனது பிறப்புறுப்பை அறுத்து எறிந்த பின்னர் அவனது சொத்துக்களையும் பறிமுதல் செய்ய வேண்டும். கணவன் பாதுகாப்பிலிருக்கின்ற பிராமணப் பெண்ணைச் சூத்திரன் கெடுத்தால் அவனது உறுப்புக்களைத் துண்டித்துச் சொத்துக்களையும் பறிமுதல் செய்து கொல்ல வேண்டும். (45) பிராமணனைக் கொல்கின்ற சூத்திரனை நான்கு தடவையாகத் தீயிலிட்டுச் சித்திரவதை செய்து கொல்லவேண்டும். ஆனால் சூத்திரனை மற்றவர்கள் கொன்றால் ஒரு வருடச் சிறைத்தண்டனையும் 12 பசுக்களை அபராதமாகச் செலுத்தும்படியும் விதித்தால் போதும். (46) வேதம் கேட்ட சூத்திரனின் காதில் ஈயத்தையும் அரக்கையும் உருக்கி ஊற்ற வேண்டும் என்றும் வேதம் உச்சரித்த சூத்திரனின் நாவைத் துண்டிக்க வேண்டும் என்றும் அவர்கள்

நண்பர்களே! கிட்டிய உறவினர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்தனர். (47) இது இயல்பா றாக, இருக்குவேதத் துதிப்பாடல்களில் பதினொரு இடங்களில் 'சிவ' எனும் சொல்லாட்சி அமைந்துள்ளது. (48) உருத்திரனைச் சுட்டுவதாய் யசுர்வேதத்தில் 'சிவன்' என்னும் பெயர் வருகிறது. உருத்திரன் துன்பத்தை நீக்குதலும் இன்பத்தை அருளுதலும் ஆகிய இருவகைத் தொழில் ஆற்றுபவராக உள்ளார். (50) சிந்துநதிப் பள்ளத்தாக்குப் பிரதேசங்களான மொகெஞ்சதாரோ, ஹரப்பா, சன்குதாரோ போன்ற இடங்களில் நிகழ்த்தப்பெற்ற அகழ்வாராய்வுகள் மூலம் பெறப்பட்ட உண்மைகள் சைவத்தின் தொன்மையைத் தெளிவாக்கின. (51) இதனால் வேத உபநிடதகாலத்திற்கும் அப்பாற்பட்டுப் பழைமை பொருந்திய சமயமெனும் தலைமையைச்சைவம் பெற்றது. (52) இங்கு பெருந்தொகையான சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டன. (53) கி. மு 3000 - 1500 ஆண்டுகளுக்கு இடைப்பட்டது சிந்துவெளி நாகரிகம். (54) இலிங்கவழிபாட்டினைப் பாசுபதர், வீரசைவர், சைவ சித்தாந்திகள், காஷ்மீரசைவர் பலரும் தம் நெறியுள் ஏற்றுள்ளனர். (55) இலிங்கதாரிகளே வீரசைவர். லகுலீச சைவர் தென்னிந்தியாவில் கி. மு 6 ஆம் நூற்றாண்டளவில் வளர்ச்சி கண்ட பிரிவினராவர். எனினும் 14 ஆம் நூற்றாண்டில் முழுமையாக அற்றுவிட்டனர். (56) இன்றைய சைவ சமயத்திற்கு விளக்கந்தருகின்ற ஆய்வாளர் டாக்டர் ப. அருணாசலம் " சிந்து வெளியில் சிவலிங்கத்திற்கு முதன்மையுண்டு. இருக்கு வேதத்தில் அது பழிக்கப்படுகிறது. எனவே ஆகம நெறிக்கொள்கையும் வேத நெறிக் கொள்கையும் இணைந்த சமயமே சைவம் " (57) என்று நிறுவுகிறார்.

மொகெஞ்சதாரோ முத்திரைகளில் " கடவுள் " என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதைப் பாதிரியார் ஹெறாஸ் எடுத்துக் கூறியுள்ளார். (58) 'கடவுள்' என்ற சொல் எல்லாவற்றையும் கடந்த பொருள் என்னும், என்னை உலகத்தையும் உயிர்களையும் உள் நின்று செலுத்தும் பொருளெனவும் பொருள் படும். 'இயவுள்' - எல்லாவற்றையும் இயக்குகின்றவன். 'இறைவன்' தலைவன்; எங்கும், நிறைபவன்; 'முனைவன்' - உணர்வை உணர்த்தும் குரு 'முதல்வன்' - தலைமையைக் குறிக்கத் தொல்காப்பியத்தில் பயன்பட்டது. 'ஆண்டவன்' உயிர்களை ஆட்கொண்டு நற்கதி அளிப்பவன் 'நாயக்' - தலைவன்; இயக்கத்துக்கவன். மெய்யன், மெய்ப்பொருள். மெய், உண்மை என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. செம்பொருள் - பேரின்பப் பெருவாழ்வைத் தரும் பொருள். செம்மை, நன்மை, மங்கலம், ஆனந்தம் என்ற பொருளில் கடவுள் பேசப்பட்டுள்ளார். 'செம்மை சேர் நாமத் தன்மை' என்ற இராமாயண அடியில் செம்மையென்பது மங்கலத்தைக் குறித்தது. ஆசிரியர் நச்சினார்க்கினியனார், 'தமிழ் மந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைக்களை யகிலாரா வாழ்த்தேட்டுளர்க" என்றுரைத்துள்ளமையை அறிந்துளர்க. இறைவன் அறிவு வடிவானவனாதலின் அறிவன், அறிவு என்ற சொற்கள் தேவாரத்தில் குறித்து நிற்பன. தோன்றியவை யாவும் அழிந்துபோம் இயல்பின. ஆகவே தோன்றாநலமுற்றிற்கு அழிவும் கிடையாது. இறைவன் அநாதியானவன், ஆகவே முடிவும் இல்லாதவன். (59) பிறப்பிலே சைவர்களாகிய நாம் இறப்பிலும் மாறக் கூடாது.

தமிழர் சமயநெறி விரிந்த நோக்குடைமையால் உருவாகியுள்ள யாவராலும் தழுவப்படுதற்குரியதாயிருப்பதோடு நூற்பிரமாணமாகிய கட்டுப்பாடு இல்லாதது. தேவார முதலிகள், மாணிக்கவாசக சுவாமிகள், நம்மாழ்வார் முதலிய சமயப் பெருந்தலைவர்கள் நூற்பிரமாணத்தை வற்புறுத்தாது தங்கள் உயர்ந்த அநுபவத்தையே எடுத்துரைத்தனர். மெய்கண்டாரும் அருணந்தியும் உமாபதியாரும் கடவுள் ஆய்ப்புலனமையையே மேற்கோளாக எடுத்துக் கொண்டனர். இதனால் சுருதிப் பிரமாணத்தையும் பார்க்கிலும் அநுபவப் பிரமாணத்தையே முதன்மையாகத் தமிழர் சமயத் தலைவர்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டனர் என்பது தெளிவு. உரையிலும் அருட்காட்சியே சிறந்ததென்பது அவர்கள் கருத்து. அருட்காட்சியின் உண்மைத்திறனைப் பகுத்தறிவினால் ஆய்ந்து அறிந்து கொள்வதற்கும் பெருந்துணை புரிந்தவர் ஆசிரியர் மெய்கண்டாரே ஆவார்.

[தொடரும்.....

அடிக்குறிப்புகள் :-

43) அதர்வ வேதம் 34, 2, 8.
44) அதர்வ வேதம் 76, 1, 5.
45) மேலது, அஸ்டம காண்டம், 6, 5.
46) வைதிக தர்மதந்திரம்.
47) அதர்வ வேதம், சூக்தம் 23, 24.
48) Bisw Bau Sihar (1988) Cult of Siva Panthi Pustak, Culcutta. P : 31 - 32.
49) Chackaravarthi Mahadev (1986) The Concept of Rudra Siva though the ages Motilae Banassidass, Delhi, P. 81.
50) தெய்வசேனாபதி, ஆ. வ. சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகள் (1991) எடுத்துக்காட்டு: டாக்டர் என். இராதாகிருஷ்ணன். மெய்யுணர்வு மேல் நிலைக் கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக் கழகம், பக். 62.

கூடியவரை சுத்தமாயிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51) Ross, Nancy Wilson (1973), Hinduism, Buddhism, Zen. Faber and Faber. London, P: 33.
52) கலாநிதி ஞானகுமாரன் மு. கு. நூல் 31.
53) மேலது, பக். 32.
54) மேலது, பக். 34.
55) மேலது, பக். 20.
56) மேலது, பக்.
57) டாக்டர் ப. அருணாசலம், மு. கு. நூல் பக். 82.
58) ந. சி. கந்தையாபிள்ளை, தமிழ் இந்தியா, பக். 198, குறிப்பு, தமிழர் சரித்திரம், பக். 19.
59) சைவநீதி, புரட்டாதி இதழ்.

### உயர்ந்தவர்கள்

மற்றவர்களுடைய உயர்வு அவர்களுடைய சிறப்பு என்பவற்றைப் பார்த்து பொறாமைப்படுகின்ற இயல்பு இன்று எல்லா மட்டங்களிலும் அதிகரித்து வருகின்றது. உயர்வடைந்தவர்கள் நிலைக்கு தாமும் முன்னேற முயற்சிக் காமல் அவர்களைப்பார்த்துப் பொறாமைப் படுவது எந்தவகையிலும் நியாயமற்றது மட்டுமன்றி, அதனால் எந்தப்பயனும் கிடைக்கப்போவதுமில்லை.

முயற்சியால் முன்னேற்ற மடைந்தவர்களை நாம் வாழ்த்த வேண்டும், அவர்களைப் பாராட்ட வேண்டும். அப்படிச் செய்வதே உண்மை யான மனிதத்துவம், அத்தகைய மனப்பக்குவம் உள்ளவர்களையே நாம் உயர்ந்தவர்களாகக் கருத முடியும்.

மலர் வெளியீட்டில் வடகிழக்கு மாகாண
ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர்
செல்வி நிலாவதி பெரியதம்பி அவர்கள்

சச்சரவில்லாத கூட்டுவேலையில் இன்பம் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் உள்ளம்

✱ Dr. V. பாலகிருஷ்ணன் ✱

உலகிலே தாய் உள்ளம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. "தாய்" என்பது உயர்வாக உலகிலே பேணப்படுகின்றது. ஆணோ, பெண்ணோ எவர்க்கு என்ன நேர்ந்தாலும் "அம்மா" என்றே கூறுவர். அது மெய்ஞ்ஞானத்தில் உமை அம்மையாரைக் குறிக்கும். இன்பம், துன்பம் எதுவாயினும் பிறந்தவுடன் மரணப்படுக்கையில் இருக்கும் போதும் "அம்மா" என்றே கூறுவார்கள். ஐயா, அப்பா என்று கூறமாட்டார்கள். சக்திக்குப் பொருத்தமான இரக்க சிந்தனை இருப்பதனால் தாய் மேன்மைப்படுகின்றாள்.

பெண்ணாகப் பிறப்பதற்கு நல்ல "மாதவம்" செய்திடவேண்டுமம்மா என்று கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் அழகாக மெருகூட்டிக் கூறியிருக்கின்றார். பிறந்தவுடன் பிள்ளை வளர்ப்பைத் தாயே கவனிக்கின்றாள். "நான் ஒரு எண்ணம், பொருந்து ஒரு மேனியுமாகப்" பிள்ளை வளர்கின்றது. இதுவும் தாய் உள்ளத்திலே சிறந்த ஒரு அம்சமாகும். மரணப்படுக்கையில் இருக்கும் போது ஒருவரை நன்கு கவனித்து இரக்க சிந்தனையில் இருந்து பராமரிப்பவரும் தாயே! ஆகவே, தாய் உள்ளம் புனிதமாகப் போற்றப்படுகின்றது.

கரவெட்டி மத்தியில் செய்லானை மகப்பேறு இல்லாமல் சுந்திரியான் முருகனிடம் முறையிட்டுக் கோயிற் பணிகள் செய்து கோவிலிற் குடும்பமாக இருந்து வரம்வேண்டினார்கள். காலக்கிரமத்தில் கருத்தரித்தாள் —கரு வளர்ந்து ஆண் குழந்தை பிரசவித்தாள். பெற்றோர்கள் அப்பிள்ளைக்கு மயில்வாகனம் என்று பெயரைச்சூட்டி வளர்த்து வந்தார்கள். மயில்வாகனம் வாலிபப்பருவம் அடைந்தான். அவனது தகப்பன் கமக்காரன். மகனுக்குப் படிப்பு இல்லை அவனுக்குப் படிப்பு முறையில் ஏறவில்லை. சுத்த மக்குப் போல் இருந்தான்.

இதனால் செல்வமாக வளர்த்த மயில்வாகனம் 18 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கார் (சுப்பரம் அடுத்த சவிஸ்றுகார்) வாங்கி ஓட்டப்பழகி வாடகையிலே தொழிலை ஆரம்பித்தான் ஆனால் உழைப்போ இல்லை அப்போது தாயான தெய்வானை பத்தினி முருகனிடம் மனம்நொந்து வரம்வேண்டினாள். அந்தத் தினம் கதிர்காமத் தீர்த்த உற்சவமாக

✱ கருணையும், மனோவேகம், புத்திகூட்டம் வேண்டும். ✱



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அன்று இரவு அவர்கள் வீட்டுப்படலையடியில் ஒரு வயோதிபக் கோலத்தில் ஒருவர் வந்து வீட்டுக்காரர் தொண்டைமானாறு போகவேண்டும் கார் விடுவீர்களா? என்று கேட்டார். இந்தச் சத்தம் கேட்டு மயில்வாகனனும், தெய்வானையும் வெளியே வந்து பார்த்து விட்டு "ஆ இப்போது இராப்பொழுதாக இருப்பதனால் என் மகனை தனியே அனுப்ப எனக்கு விருப்பமில்லை" என்று தெய்வானை கூறினாள். இதைக் கேட்ட வயோதிபர் நீர் இருக்கின்றீர் தானே கூட வாரும் என்று சொன்னார். தெய்வானையும் அதற்குச் சம்மதித்து தானும் மயில்வாகனனும் முன் ஆசனத்திலும் வயோதிபர் பின் ஆசனத்திலும் இருந்து மூவருமாகத் தொண்டைமானாறு நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

அவர்கள் போய்ச் சேரும் இடம் நெருங்கியதும் கோவிற் பனையைக் காட்டினார். வயோதிபர் சொன்ன இடத்துக்குக் கார் மெதுவாக நகர்ந்தது. அப்போது தெய்வானை பின்பக்கமாகத் திரும்பி, நீர் கோவிலுக்கா போகின்றீர்கள் என்று கேட்டார். பின் ஆசனத்திலிருந்த வயோதிபரைக் காணவில்லை. அவர் மாயமாக மறைந்துவிட்டார். அவர்களுக்குத் திகில், ஆச்சரியம் அடைந்தார்கள். தெய்வானைக்கு விடயம் புரிந்துவிட்டது. அந்தத் தாயுள்ளம் இது முருகனின் திருவிளையாடல் என நினைத்து இருவரும் தொண்டைமானாறு வலம் வந்து சந்நிதிநாதனை வணங்கினார்கள். என்ன ஆச்சரியம் மறு நாள் வீட்டுக் காருக்கு நல்ல கிராக்கி.

அன்று தொடக்கம் உழைப்போராகத் தொடங்கியது இன்றும் வெற்றி வாய்க்கப்பட்டது. மயில்வாகனன் சம்பளத்திற்கு ஆள் வைத்து நன்றாய் உழைத்து முன்னேறினான். அந்தத் தாய் உள்ளம் சந்தோஷமடைந்தது. அந்தத் தாய் நினைத்தவைகள் எல்லாம் நிறைவேறின. பின் ஒவ்வொரு வருடாந்த உற்சவத்துக்கும் லொறியில் இலவசமாக ஆட்களை ஏற்றிக் கோவிலுக்குத் தொண்டுகள் செய்தனர். "அவன் இன்றி அணுவும் அசையாது."

சுபம் சாந்தி!

ஏன் கற்கண்டை எல்லோருக்கும் கொடுக்கிறோம்? கற்கண்டை இரு கூறாக்கித் திருப்பிப் படித்தால் என்ன வருகிறது? கண்டு — கல் — கண்டதை எல்லாம் கற்காதே. இனிப்பைக் கண்டு, கற்க வேண்டியதைக் கற்கண்டு போல சுவைத்துக் கல் என்பது தான் பொருள்.

# நெஞ்சில் மலரும் நட்பு

தொகுப்பு: சந்திரிமாஸன் ஆச்சிரமம்

பிறருடன் பழகி நண்பர்களைப் பெறக் கற்றுக்கொள்ளுங்கள். ஒரு நண்பர் இருந்தால் உங்கள் வாழ்க்கையின் போக்கு லபமாகவும் வளம் நிறைந்ததாகவும் ஆகிவிடுகிறது. அத்தகைய நட்பு நீங்களே உங்களுக்கு அளித்துக் கொள்ளும் மிகச்சிறந்த பரிசாகும். நீங்கள் உங்கள் நண்பரைத் தேர்ந்தெடுக்கலாம்; ஆனால் விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. யாரையும் நண்பராகும்படி வற்புறுத்தவும் முடியாது. ஒரு நல்ல நண்பரைத் தேடிக் கண்டு பிடிப்பது ஒன்றுதான் வழி.

நம்முடைய பல நல்ல நயமான செயல்கள் நண்பர்களைச் சம்பாதித்துக் கொடுக்கும். முன் யோசனை இல்லாமல், ஆத்திரத்தில் எடுபடும் ஒரே ஒரு செயல் நண்பர்களை இழந்துவிடச் செய்யும். நல்ல நண்பர் ஒருவரைப் பெற நமக்குத் தகுதி வேண்டும். அது கிடைக்க நாளும் வளர வேண்டும். நமது உள்ளத்தில் சுயநலமில்லாத நட்பு உணர்வு மலர வேண்டும். மற்றவர்களுக்காக பாசம் நெகிழும் மனம் அங்கே வீச வேண்டும்.

நாய்கள் நம் அன்புக்குரியனவாக நட்பு உணர்ச்சியோடு பழகுவனவாக, எளிதில் ஆகிவிடுகின்றன. அவை அந்த உணர்வைக் காட்ட வாலை ஆட்டுகின்றன. அதுபோலவே நாக்கை ஆட்டுவதில்லை! பிறரிடம் நயமாக, இனிமையாக, அன்போடும், பணிவோடும் பேசக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு நிறைய நண்பர்கள் கிடைப்பார்கள். பிறரிடம் அன்பு காட்டுவதும் பாச உணர்வு வளர்ப்பதும்தான், மேலும் மேலும் நிறைய நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்வதற்குரிய பண்புகள். நம் செயலில் அன்பின் மலர்ச்சி தெரிய வேண்டும் என்பதுதான் எல்லா மதங்களுக்கும் பொதுவான அடிப்படை; நமக்கு இதுவும் ஒரு முக்கியமாக அமைந்த கொள்கை.

'நண்பர் யார்?' - மற்றவர்கள் உங்களை உதறி விட்டுப் பிரிந்து சென்றபோது, அப்போதும், முகமலர்ச்சியோடும் உங்களிடம் நெருங்கி வந்து ஆறுதல் கூறுபவர். அத்தகைய நண்பரை நீங்கள் வெளியே தேடி, நாடி அடைய முடியாது. அப்படி ஒருவர் கிடைக்க, நீங்கள்தான் உள்ளத்தால் உயர்ந்து வளர வேண்டும்!

சினம் போல பகைவர் இவ்வுலகில் இல்லை.

## 01-08-1999 இல் இருந்து
# நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

[ தொடர்ச்சி... ... ...

| | | | |
|---|---|---|---|
| 61) | திரு. வி. சிவப்பிரகாசம் | புங்கை வீதி, தெற்கு | 1 மூடை அரிசி |
| 62) | திரு. த. சபாபதிப்பிள்ளை | சாயி இல்லம், புட்டளை | 3000 00 |
| 63) | திரு. சே. இராசதிலகம் | இமையாணன் | 3000 ... |
| 64) | திரு. சே. இரவீந்திரன் | இமையாணன் | 1000 ... |
| 65) | இராமலிங்கம் பாக்கியம் | மூளாய் | 500 ... |
| 66) | T. பரமேஸ்வரி | இந்திரம்மன் கோவிலடி, புலோலி | 500 ... |
| 67) | திரு. S. செல்லத்துரை | பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை | 1 மூடை அரிசி 500 ... |
| | திரு. மு. குணரத்தினம் | மாவிட்டபுரம் வீதி, உரும்பிராய் | 1000 ... |
| 68) | திரு. ஐ. சிவநாதன் மருதடி | இருப்பகம், நெல்லியடி | 3 மூடை அரிசி |
| 69) | திரு. இ. புவனேந்திரராசா | பிள்ளையார் ஸ்ரோர்ஸ், நெல்லியடி | 2 மூடை அரிசி 1000 ... |
| 70) | திரு. சி. அகிலதாஸ் | நெல்லியடி | 1 மூடை அரிசி |
| 71) | ஜெகா மோட்டோர்ஸ் | நெல்லியடி | 1 மூடை அரிசி |
| 72) | த. இரத்தினம் ஆசிரியை | பிறிளை, கரவெட்டி மேற்கு | 500 ... |
| 73) | திரு. இ. வைரவநாதன் | இமையாணன் | 1000 ... |
| 74) | திரு. பி. செல்வராசா | இமையாணன் | 200 ... |
| 75) | திருமதி ப. நாகேஸ்வரி | நவிண்டில் | 2000 ... |
| 76) | S. விக்னேஸ்வரராசா | சுப்ராங் கந்தப்பாய் | 3500 ... |
| 77) | க. சதாசிவம் | அத்திராண், கரவெட்டி | 1000 ... |
| 78) | மயூரன் | ,, | 2000 |
| 79) | ஆ. இராசம்மா | ,, | 2000 ... |
| 80) | திருமதி சிதம்பேதவி தியாகராசா | கண்டுக்குளி, யாழ். | 2000 ... |
| 81) | இந்திராதேவி மகேந்திரன் | கனடா | 3000 ... |
| 82) | திரு. S. S. மகேந்திரன் | கனடா | 2000 |
| 83) | திரு. இ. புஷ்பநாதன் | கனடா | 1500 ... |
| 84) | திரு. செ. சோமஸ்கந்தன் | நல்லூர் | 400 ... |
| 85) | ந. ருக்மணி | நல்லூர் | 500 ... |
| 86) | திரு. நா. குகன் | குகன் ஸ்ருடியோ | 1000 ... |
| 87) | திரு. அ. இராமநாயகம் | கைதடி மத்தி | 1001 ... |
| 88) | திரு. A. S. S. இராமச்சந்திரன் | மாவிட்டபுரம் | 4000 ... |
| 89) | திரு. R. இராசலிங்கம் | மட்டக்களப்பு | 1000 ... |
| 90) | திரு. க. ஜெயக்குமார் | பெரியபுலம், சுன்னாகம் | 500 ... |

அன்பே வாழ்க்கையின் அறநெறியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91) திரு. வை. சின்னப்பு நாவலடி, உடுப்பிட்டி 1 மூடை அரிசி
92) திரு. I. புவனேந்திரன் நாகலிங்கசுவாமி வீதி, கண்டாவளை 500 ...
93) கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம் வியாபாரிமூலை 1000 ...
94) திருமதி சுந்தரநாயகி பசீரதி அம்பாள் பத்தமேனி, அச்சுவேலி 1000 ...
95) Dr. S. சிவசம்பு நாதன் வைத்தியசாலை உடுப்பிட்டி 3500 ...
96) திருமதி செல்வலிங்கம் கொழும்பு 2000 ...
97) திரு. சி. கணேசமூர்த்தி அல்வாய் 1000 ...
98) திரு. சு. ஜெயராஜசிங்கராசா இமையாணன் வடக்கு 1 மூடை அரிசி
99) சுந்தரமூர்த்தி இராசம்மா வயோதிபர் இல்லம் புத்தூர் 700 ...
100) திரு. சி. இரத்தினம் குரும்பசிட்டி 500 ...
101) திருமதி தம்பிராசா சுன்னாகம் 1000 ...
102) திருமதி சிவபாக்கியம் ஏகாம்பரநாதன் சிவன் வீதி
ஆவரங்கால் 2000 ...
103) திரு. வி. தங்கவடிவேலு சித்ரா பேக்கரி, 5000 ...
104) திரு. தி. ஜெயரிவன் அந்திரான் கரவெட்டி 1000 ...
105) நாகமுத்து வேலுப்பிள்ளை 2ம் குறுக்குத் தெரு பருத். 1000 ...
106) திரு. சி. முருகேசு கரவெட்டி கிழக்கு 500 ...
107) திரு. வி. கபில்தேவ் குஞ்சர்கடையடி 500 ...
108) தி. இந்திராதேவி அம்பனை பருத்தித்துறை 2000 ...
109) திரு. து. வைகுந்தன் செல்வம் புளியங் கூடல்
வல்வெட்டித்துறை 1 மூடை அரிசி
110) திரு. ந. இராசேஸ்வரன் தெணியம்பை V.V.T. 1 மூடை அரிசி
111) திரு. மு. இராசா வாணனவாய் மந்தி 1000 ...
112) திரு. க. சேனாதிராசா குஞ்சர்கடையடி 500 ...
113) செல்வமுத்துரால் புடவை மாளிகை நெல்லியடி 2 மூடை அரிசி
114) கன்டி பற்றிக் சென்றர் கொழும்பு 5 மூடை அரிசி
115) திரு. ந. நற்குணம் கல்யாண நகை மாடம் 6000 ...
பருத்தித்துறை 1 மூடை அரிசி
116) Dr. K. சிவஞானசுந்தரம் கொழும்பு 5500 ...
117) சுப்பிரமணியம் பத்மநாதன் சுந்தரபுடையார் ஒழுங்கை
பருத்தித்துறை 1000 ...
118) மதுரன் வர்த்தக நிலையம் 1 மூ அரிசி
119) திரு. ஆ. ஸ்ரீரத்தினம் திருநெல்வேலி 3000 ...
120) சிவானந்தம் மூலம் வதனா ஜெயசுந்தரம் ஈவ்லைன் 2000 ...
121) மு. ஜெகநாதன் - மலர் சந்தைத்தறை உடுப்பிட்டி 2000 ...
122) லக்ஷி தொலைத் தொடர்பகம் அச்சுவேலி 1 மூ. அரிசி, 50kg பரு.
123) திரு. சி. சிவசுப்பிரமணியம் ஆனந்தன் கரவெட்டி மேற்கு 1000 ...
124) வித்யாசாகர்சர்மா நாகர் கோவில் 1000 ...
125) த. விமலேஸ்வரன் மாலிசந்தி, அல்வாய் 1000 ...

(தொடரும்...

ஆசை உள்ள இடத்தில் அகங்காரம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முருக மந்திரம்

## - முருகன் கழல் பெற்றுய்வாய் -

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்

இறைவன் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருந்து அனைத்தையும் இயக்கும் சக்தியாகக் காணப்படுகிறான். ஐம்பூதங்களாக வியாபித்து நிற்பவன் இறைவன் என்பதை "வான்ஆகி மண்ஆகி வளிஆகி ஒளிஆகி எனத்



திருவாசகம் விளக்குகிறது. ஞானிகளால் நினைக்கப்படுகின்ற முருகனை "ஞானந்தானுருவாகிய நாயகன்" எனக் கந்த புராணம் குறிப்பிடுகிறது. சிவனுடைய நாற் திருவங்களுள் குரு மூர்த்தமாகத் திகழ்வது தட்சணாமூர்த்தி வடிவம் ஆகும். தட்சணாமூர்த்திக்குப் பிரணவத்தை உபதேசித்த குருபரனாக முருகன் திகழ்கிறார். உருவம், நாமம் அற்ற இறைவனின் நிலையைச் சொரூப நிலை என்றும், உருவம், நாமத்தோடு கூடிய நிலையைத் தடத்த நிலை என்றும் சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது. அருவமாகவும், உருவமாகவும், அநாதியாகவும், ஒன்றாகவும், பலவாகவும், பிரம்மமாகவும் நின்ற பரஞ்சோதிப் பிழம்பே ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு முருகப் பெருமானாகத் தோற்றம் பெற்றார் என்பதை

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகம் உய்ய

✯ துன்பம் வழக்கொரு மௌன ஆசிரியன். ✯



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கந்தபுராணம் குறிப்பிடுகிறது. இறைவனின் திருவருள் துணை இல்லாமல் இறைவனை உணரவும் முடியாது. இறைவனை அடையவும் முடியாது. "அவனருளாலே அவன் தாள் வணங்கி" எனத் திருவாசகத்தின் சிவபுராண வரிகள் இதனை உணர்த்துகின்றன. முருகனைக் குருமூர்த்தியாக உபாசனை செய்து பலகாலம் தவங்கிடந்தால் குமரன் குருவாக வந்து நமக்கு அருள் புரிவான். முருகன் ஒருவனையே பாடும் திடங் கொண்ட அருணகிரிநாதர் அவனின் அருள் பெற்று அவனையே குருநாதராகப் பெற்றிருந்தார்.

உருவாகவும், அருவாகவும், உள்பொருள் ஆகவும், இல்பொருள் ஆகவும், இருளாகவும், ஒளியாகவும் நிற்கின்ற முருகப் பெருமானின் திருவருள் துணையினால் மெய்யறிவினைப் பெற முடியாதவர்கள் வெறும் ஏட்டறிவினால் அறிய மாட்டார்கள் என்பதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

முருகன் தனிவேல் முனிநம் குருவென்
றருள் கொண்டறியார் அறியுந்தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே

ஆன்மா அறிவித்தால் அறிவது. பொறிகளின் துணையினால் அறிவைப் பெறும் ஆன்மாவை அறிவென்ற பொருள் எனக் கூறுவது பொருந்தாது என்பதைப் "பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு அறிவென்ற பேர் நன்றற" எனத் திருவருட்பயன் விளக்குகிறது. ஒவ்வொரு மனிதனும் பிரபஞ்ச இன்பங்களை நுகர்வதற்குத் துணையாக மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும் காணப்படுகின்றன. காண்பதும், செப்புவதும், கேட்பதும், சிந்திப்பதும் இறைவனாகிய குருவையே பற்றி நிற்குமானால் மூர்க்கப் புலன்கள் அடங்கும் இறைவன் திருவருளையே நாடி நிற்கும் ஞானப் புலன்களாக மாறி விடும். அநுபக்குவம் ஞானமும் ஏற்பட்டு விட்டால் இறைவனை இந்த உடம்பிற்குள்ளேயே சந்திக்கும் தவயோக நிலையை ஆன்மா பெற்று விடும். உடல் இச்சைகளிற் செல்கிற புலன்கள் மடைமாறி மெய்ப்பொருளை நாடிச் செல்லும். ஆன்மா தன்னைச் சார்ந்து நின்ற மற்றைப் பற்றுக்களையெல்லாம் களைந்தெறிந்து விட்டுத் தன்னந்தனியே சென்றால் இறையருளைப் பெற்று விடும் என்பதனைப் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே புலனைந்தும் தன்வசம் ஆயிடும்
தானே புலனைந்தும் தன்வசம் போயிடும்
தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே

மனிதருடைய வாழ்வில் பல் வேறு காலங்களில் பலவிதமான பற்றுக்கள் தோன்றுகின்றன. இந்த உலகத்தில் வாழும் ஒவ் வொரு மனிதனும் ஏதோ சில பற்றுக்களினால் பீடிக்கப்பட்டே காணப்படுகிறான். சில வேளை களில் பற்று ஆசையாக வளர்ச்சி அடைந்து பேராசையாகப் பரிணா மம் பெறுவதும் உண்டு. "பேராசை பெருந் தரித்திரம்" என்பது நம் மிடம் உள்ள முதுமொழியும் ஆகும். தன்னுடைய சொத்துக் களில் விருப்பம் கொள்வதைப் பற்று என்றும், பிறருடைய பொருட்களில் விருப்பம் கொள் வதை ஆசை என்றும் குறிப்பிட லாம். இந்து தர்ம சாஸ்திரங்கள் பற்றுக்களை மறுதலிக்கின்றன. ஆனால் ஆசையை முற்றாக நிரா கரிக்கின்றன. ஐம்பொறிகளின் வழி செல்லும் ஆசைகளை முற்றிலும் விட வேண்டும் என்றும் திருக்கரத் தில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் வேலாயுதத்தை உடைய முருகப் பெருமானின் திருவடியைப் பற்றிப் பிடித்து உய்தி பெற வேண்டும் என்பதையும் கந்தரநுபூதியின பதினான்காவது பாடல் பின்வரு மாறு விளக்குகிறது.

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநாசியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே

தான் இறைவன் என்ற இரண் டிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே பக்தி ஆகும். இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று மனித மனம் நாடுகின்ற முயற்சியே பக்தி ஆகும். ஆன்மாவுக்கும் இறைவ னுக்கும் உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே பக்தி ஆகும். தன்னை மறந்து தற்போதமில்லாமல் ஒரு செய லைச் செய்தால் அது உள் நின்று தூண்டும் இறையருளாற் செய்யப் படும் செயலாகவே காணப்படுகி றது. அடியார்களின் செயல்கள் அனைத்தும் ஆண்டவனின் செயல் கள் என்பதைச் "சித்தம் சிவமாக் கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்" என மாணிக்கவாசகரின் திருவாசகமும் கூறுகிறது. அன்பு நெறியின் எது செய்தாலும் அது எம்பிரானுக்கு ஏற்றதாகும் என் பதைக் கண்ணப்ப நாயனார் புரா ணத்தின் ஊடாகச் சேக்கிழார் பெரியபுராணத்தில் விளக்குகிறார். குடுமித் தேவரைக் கண்ட மாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றத்தில் திண்ணனார் அன்புருவமாக மாறினார் என்பதைப் ''பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார்'' எனப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது.

முருகப் பெருமானை உள்ளம் உருகி வழிபட வேண்டும். உள்ளம் உருகினால் உயிர் உருகும். உயிர் உருகினால் உயிர்க்குயிராய் இருக்கும் இறைவனுடன் ஒன்றுபடும் அத்துவித முத்தி ஆன்மாவிற்குக் கிடைக்கும். தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை ஆகிய எண்குணங்களும் சிவனிலிருந்து வேறாகாத சக்தியாகிய முருகனுக்கும் உரியதாகும். முருகனுக்குப் பல நாமங்கள் வழங்கப்படுவதுண்டு. இவற்றில் முருகன், குமரன், குகன் என்பவை சிறப்புற்ற திருநாமங்கள் ஆகும். இவை அனைத்திலும் முருக உபாசகர்கள் அனைவராலும் உள்ளன்போடு உச்சரிக்கப்படும் நாமம் முருகன் என்பதாகும். ''அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக'' எனத் திருமுருகாற்றுப்படையும், ''மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்'' எனக் கந்தரலங்காரமும் முருக நாமத்தின் மகிமையை எடுத்து இயம்புகின்றன. வானுறையும் தேவர்களும் மண்ணுலகில் வாழும் மனிதர்களும் புகழ்ந்து துதி செய்கின்ற ஒரு மூர்த்தியாகிய முருகப் பெருமானை, அருட்குணங்கள் எட்டுக்கும் உறைவிடமானவரை உள்ளம் உருகி மெய்யுணர்வினைப் பெற்று வழிபடும் தன்மையை அருணகிரியார் ஞான பண்டிதனிடம் வேண்டி நிற்பதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவ எண் குணபஞ் சரனே

மனிதர்களுடைய வாழ்வில் அவர்களுடைய அழிவிற்கு மூல காரணமாக இருப்பது ஆசையாகிய சக்தியே ஆகும். ''போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்பது முதுமொழி ஆகும். ஆனால், மனித மனம் எத்துணை வந்தாலும் நிறைவு கொள்வதில்லை. பெருங்காற்றில் அகப்பட்ட பஞ்சைப் போல் ஆசையால் மனம் அலைபாயும். ''செல்வம் என்பது சிந்தையின் நிறைவே'' என்பதே குமரகுருபர சுவாமிகளின் வாக்கும் ஆகும். பொருளாசையும் பொருளினால் வருகின்ற உலகியல் இன்பங்களை அநுபவிக்க வேண்டும் என்ற உணர்வும் சராசரி மனிதனுடைய சிந்தனையை நாளாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் ஆட்டிப் படைக்கின்றன. ஆசை பேராசையாக மாறினால் பெருந் தரித்திரமே விளைகின்றது பிறர் வருந்த ஈட்டிய பொருள் யாவும் காலப்போக்கில் தான் வருந்த அழிந்து விடும்.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பாலவை.

என்று திருக்குறளும் இதனை விளக்குகிறது. நான்கு பேர் சுமக்கும் இந்த எண்சாண் உடம்பு முடிவில் ஒருபிடி சாம்பல் ஆகிவிடுகின்றது. இந்த அழியும் உடலைப் பேணுவதற்காகப் பல கேடுகளை நாம் இதற்குள்ளே பதைக்கின்றோம். இறைவன் வீற்றிருக்கக் கூடிய இந்த உடலை மயானமாக மாற்றுகிறோம். இந்த உடலில் உள்ள கருவிகரணங்கள் அனைத்தையும் கலியுகவரதனாகிய கந்த வேளுக்கே அர்ப்பணிக்க வேண்டும். அவனுடைய பெருமைகளைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளேயாம்.

"கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக இருக்கும் ஆறுமுகப் பெருமானது திருவுருவத்தைத் தரிசிப்பதையே நமது கண்கள் பெற்ற பயனாகவும், அவரது புகழைக் கேட்பதையே நமது செவிகள் பெற்ற பயனாகவும் அவரது நாமத்தைக் கூறுவதையே நமது நா பெற்ற பயனாகவும், அவரது திருப்பாதாரவிந்தங்களைத் தொழுவதையே நமது கைகள் பெற்ற பயனாகவும், அவரது தொண்டுக்கு ஆட்படுவதையே நமது மனம், வாக்கு, காயம் முதலிய கரணங்கள் பெற்ற பயனாகவும் கருதி வழிபட வேண்டும்" எனச் சங்கராச்சாரியார் அருளிய சுப்பிரமணிய புஜங்கம் என்ற தோத்திர நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராசையாகிய பெருந்தளையினால் கட்டுண்டு அதனால் வரும் துன்பத்தை அறியாமல் அடியேன் அலைதல் நீதியாகுமோ? சூரனுடைய அசுரவடிவம் அழியும்படி வேலாயுதத்தை அவன் மேல் ஏவிய சூரமூர்த்தியே! தேவருலகத்தைக் காத்தருளியவரே என்னையும் அதுபோது காத்தருளும் என்று முருகப்பெருமானை வேண்டுவதைப் பின்வரும் அநுபூதிப் பாடல் விளக்குகிறது.

பேராசை எனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர் படவேல் எறியும்
சூரா சுரலோக துரந்தரனே.

(தொடரும் - ...)

நுண்ணறிவுடன் துணிவும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் தந்த படிப்பினைகள்

ஆ. கதிரமலைநாதன்

தேவலோகத்தின் மும்மூர்த்திகளிடையிலும் யார் பெரியவன் என்பது பற்றி ஒரு போட்டி. படைப்புத் தொழில் செய்யும் பிரம்மா தானே பெரியவன் என என்றுரைக்கின்றான்; காத்தற் தொழில் புரியும் விஷ்ணு தான் தான் பெரியவன் என நினைக்கின்றான்; அழித்தற்றொழிலை நடாத்திவரும் உருத்திரனோ நடப்பது நடக்கட்டும் என்று எதுவுமே பேசாதிருக்கின்றான்.

உருத்திரனது அமைதிநிலைத் தவறாகப் புரிந்து கொண்ட பிரம்மாவும், விஷ்ணுவும் இன்னும் ஒரு படி மேலேயே சென்று விடுகின்றனர்.

இந் நிலையில் இறைவன் அசரீரியாக "எனது அடியையோ அல்லது முடியையோ யார் முதலிற் கண்டு பிடிக்கிறாரோ அவரே முழுமுதற் கடவுளாக ஏற்கப்படுவார்" எனக் கூறினார்.

பிரம்மா தனது வாகனமாகிய அன்னப் பட்சியின் வடிவெடுத்து, இறைவனது முடியைத் தேடிக் காண வான் நோக்கி விரைந்து மேலே மேலே பறக்கின்றான்.

விஷ்ணுவோ பன்றி வடிவமெடுத்து இறைவனது அடியைக் கண்டு பிடிக்க நிலத்தை அகழ்ந்து கீழே கீழே போகின்றான்.

இருவராலும் முடியையோ அடியையோ கண்டறிய முடியவில்லை. பன்றி வடிவெடுத்த விஷ்ணு தனது இயலாமையை உணர்ந்து இறைவனைச் சரணடைந்தான். இறைவனும் அவனை மன்னித்துப் பெருமைப் படுத்துகின்றான்.

அன்னப்பட்சியின் வடிவெடுத்த பிரம்மாவினாலும் இயலாத போதும், அகங்காரத்துடன் மேலே மேலே போகின்றான். அவ் வேளை இறைவனின் ஜடா முடியிலிருந்து ஒரு தாழம் பூவானது, தவறிப் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது.

தான் இறைவனது முடியைக் கண்டதாகவும், அதற்கு அவனது ஜடா முடியிலிருந்து தவறிய நீயே சாட்சி சொல்வதே பொருந்தும் என்றும் பிரம்மா தாழம் பூவிடம் விநயமாகக் கேட்டுக் கொண்டான்.

படைப்புத் தொழிலைச் செய்யும் பிரம்மாவே தனது உதவி

இன்பமான செயல் இதமாயும் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கேட்டு நிற்பதனையும், தான் இறைவனின் முடியில் இடம் பெற்றிருந்தமையை உவகந்திருப் பெரிதாகப் பாராட்டுவதாகவும் நினைத்த தாழம் பூவும் அதற்குச் சம்மதித்துக் கேதகை மலரிடமும் அவ்வாறே தெரிவித்தது.

பொய் சொன்னபடியினால், பூவுலகத்திலுள்ளோரால் வணங்கப்படத் தகாதவனாகப் பிரம்மா சாபமிடப்பட்டான். இதனால் அவனுக்கெனக் கோவில் அமைக்கப்படுவதும் இல்லாமற் போயிற்று. பொய்ச்சாட்சி சொன்ன காரணத்தினால், சிவ பூசைக்குரிய மலர்களிலிருந்தும் தாழம் பூவினைக்கு விலக்களித்துத் தண்டனை வழங்கப்பட்டது.

இக் கதையிலிருந்து பின்வரும் படிப்பினைகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

- இறைவனே முழு முதற் கடவுளாக ஏற்கப்பட்டமை.

- பிரம்மா வணங்கும் தகுதியை இழந்து போனமை.

- முடி - அடி தேடியது என்னாது, அடி - முடி தேடியது என்றே சொல்லப்படுகின்றமை.

- தாழம்பூ சிவ பூசைக்குரிய பெருமை இழந்து போனமை.

இவ்விடயங்கள் எல்லாவற்றிலும் ஒரு மலரே (தாழம்பூ) நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளதனை அறிந்து கொள்ளக் கிடக்கிறது. எனவே அவ் வகையில் இறைவனது பெருமைகளை நிலைநாட்டுவதற்கு எத்தனையோ பெரிய - சிறிய உயிரினங்கள் இருக்கும் போது ஒரு சாதாரண மலரை இதற்காகத் தேர்ந்தெடுத்தமை மலரின் பெருமையை மேலும் பெருமைப் படுத்துவதாயில்லையா?

## மனிதனாய் நட பார்ப்போம்

வானிலே பறக்க முயற்சியா, பலூன்கூட மிதக்கிறதே. நீர்மேல் நடக்க முயற்சியா, தக்கோர் துண்டு மிதந்து போகிறதே. இவை சாதனையாகமாட்டா. அங்கே மண்மீது மனிதனாய் நட பார்ப்போம்.

எதனையும் மனம் நோகப் பேசாதே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

……………………………

✽ ந. அரியரத்தினம் ✽

சந்நிதி ஆலயத்தின் தலவிருட்சமாக விளங்குவது புனித பூவரச மரமாகும். சந்நிதியில் வாழ்ந்த மகான் ஒருவருடைய சமாதியுடன் இந்தப் பூவரசமரம் தொடர்புபட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இந்தப் புனிதமரம் சந்நிதி ஆலயத்தின் தெற்கு வீதியில் வள்ளியம்மன் வாசலுக்கு எதிரே என்றும் பசுமையுடன் காட்சி தந்து கொண்டிருப்பதை நாம் காணலாம்.



ஆரம்ப காலத்திலிருந்தே இது ஒரு அற்புதவிருட்சமாக விளங்கி வருகின்றது. அடியவர்கள் இதன் சிறப்பையும் புனிதத்தையும் உணர்ந்து இந்த மரத்தின் பழுத்த இலைகளைப் புனிதப்பொருளாகக் கருதி எடுத்துச் செல்வது வழக்கம். அது மட்டுமன்றி சந்நிதியான் மேற்கொள்ளுகின்ற திருவிளையாடல்களில் ஒரு அங்கமாக அல்லது அடையாளமாகவும் இந்தப் பூவரசமிலை விளங்கி வந்திருப்பதையும்

அறியாமையிலிருந்து கேடு விளைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் காணமுடிகின்றது. மிக அண்மையில் நடைபெற்ற அப்படியான ஒரு அற்புத நிகழ்வினை அடியவர்களுக்கு இங்கே வழங்குகின்றோம்.

திரு. ப. முருகதாஸ் என்பவர் வல்வெட்டித்துறையில் ஊரிக்காடு என்ற இடத்தில் வாழ்ந்து வந்த இறைபக்தியுள்ள ஓர் அன்பர். அவர் இளமையிலிருந்தே கார் ஓட்டுகின்ற தொழிலை மேற்கொண்டு வருகின்றார். அவர் தன்னுடைய காருக்கும் 'கல்யாணி' என்று பெயரிட்டுள்ளார். அந்தக் கார் தொடர்பாகக் கதைப்பவர்கள் அவரின் பெயரைக் குறிப்பிட்டு முருகதாஸின் கார் என்றோ அல்லது காரின் பெயரைக் குறிப்பிட்டுக் "கல்யாணிக்" கார் என்றோ கதைப்பது வழக்கம்.

பொதுவாக வடமராட்சியில் உள்ளவர்கள் திரு. முருகதாஸையும் அவரது கல்யாணிக்காரையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று கூறலாம். எந்த ஆபத்தான வேளையிலும் எவருக்கும் மறுக்காமல் அவர் தன்னுடைய காரை வாடகைக்கு ஓட்டிச் செல்ல முன் வருவதே இதற்கான காரணமாகும். இவ்வாறு ஆபத்பாந்தவனாகச் செயற்பட்டு வந்த இந்த அன்பர் 1996-ஆம் ஆண்டு இடப்பெயர்வுடன் வன்னிக்குக் குடும்பத்துடன் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. இவர் வன்னியில் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது இராணுவத்தின் பிரதேசவிஸ்தரிப்புச் செயற்பாட்டின் பொழுது இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு பல கஸ்டங்களுக்கு உட்படுத்தப்பட்டார். அதைத்தொடர்ந்து பனாகொடையில் அமைந்துள்ள ஐக்கிய இளைஞர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நன்னடத்தைக்காக அனுப்பப்பட்டார். அங்கே அவர் தனக்கே இயல்பாக உள்ள நற்பண்புகளுடன் செயற்பட்டதுடன் அங்கே உள்ள இந்துக் கோவிலையும் நல்ல முறையில் பராமரித்து வந்தார். இக்காரணங்களால் இவர் தன்னுடைய நன்னடத்தைக் காலத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே விடுதலை பெற்று வீடு வந்து சேர்ந்துள்ளார்.

தற்பொழுது திரு. பா. முருகதாஸ் அவர்கள் கம்பர்மலை வல்வெட்டித்துறை என்ற விலாசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். வன்செயலில் இராணுவக்கைதின் பொழுது இவர் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களையும் வாகனங்களையும் இழந்துள்ளார். தற்பொழுது தொழிலை மேற்கொள்ளக் கூடிய வசதியின்றி அன்றாடம் தன்னுடைய குடும்பத்தை நடாத்துவதற்கு வருமானமேதுமின்றி மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஆனாலும் இவர் தன்னுடைய இறை நம்பிக்கையைக் கைவிடவில்லை. சந்நிதி உட்படத் தனது இருப்பிற்கு அண்மையில் உள்ள எல்லா ஆலயங்களுக்கும் சென்று வருகின்ற வழக்கத்தைக் கடைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்து வருகின்றார். 13-ம் வெள்ளிக்கிழமை இவர் சந்நிதி ஆலயத்திற்குச் சென்று வழமை போல வழிபாட்டில் கொண்டிருந்தார். அப்பொழுது சந்நிதியின் தலவிருட்சமான பூவரச மரத்தின் கீழ்நின்று வழிபடும் பொழுது அவருடன் கூடநின்று வழிபட்டுக் கொண்டிருந்த தொண்டைமானாற்றைச் சேர்ந்த நல்லதம்பி என்ற அன்பர் தலவிருட்சத்தினுடைய பழுத்த இலைகள் இரண்டு எடுத்து திரு. முருகதாஸ் அவர்களிடம் வழங்கி அவற்றைப் புனிதமாகப் பாதுகாக்குமாறும் கூறினார்.

திரு. நல்லதம்பி அவர்கள் அந்த இலைகளை எவ்வாறு பக்குவமாகப் பாதுகாக்க வேண்டுமென்று கூறியதிலிருந்து திரு. முருகதாஸ் அவர்கள் அந்த இலைகள் புனிதமானவை என்பதை உணர்ந்து கொண்டார். ஆனாலும் அந்தப் புனித இலைகளினுடைய சிறப்பு, பெருமை என்பன என்ன என்பதை திரு. முருகதாஸ் அவர்கள் அதுவரை தெரிந்திருக்கவில்லை. ஆகவே அவற்றை அறிந்து கொள்ள விரும்பினாலும் அந்த இடத்தில் அதனை விசாரிப்பது இங்கிதமற்ற ஒரு செயல் என்பதனால் அது பற்றி எவரிடமும் ஒன்றும் விசாரிக்காமலே வீடு திரும்பிவிட்டார்.

அடுத்த நாள் சனிக்கிழமை திரு. முருகதாஸ் உடுப்பிட்டிச் சந்தைக்குச் சென்றிருந்தார். அங்கே இவரைப்பற்றி நன்கு அறிந்த, இவருடைய பொருளாதாரக் கஷ்டத்தை நன்கு உணர்ந்த சைவப் பேரவையின் முக்கிய உறுப்பினர் ஒருவர் அவரைச் சந்தையில் சந்தித்துச் சுகம் விசாரித்த பின் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார். தனது வீட்டிற்கு அழைத்துச்சென்ற அந்த அன்பர் ஒரு தொகைப்பணத்தைத் திரு. முருகதாஸிடம் வழங்கி ஏதோ தன்னால் செய்யக் கூடிய சிறிய உதவியாக அதை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். அத்துடன் திரு. முருகதாஸ் தன்னுடைய தொழிலை ஆரம்பிப்பதற்கு தேவையான மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சில வழிகளையும் கூறி அவருடைய துன்பத்தைப் போக்கும் நடவடிக்கையிலும் தன்னாலான உதவியைச் செய்ய முன்வந்தார்.

நடந்து கொண்டிருக்கின்ற சம்பவங்களை நிஜமா? கனவா? என்ற சந்தேகம் முருகதாஸிற்கு ஏற்பட்டது. ஏனென்றால் ஒவ்வொரு நாளும் குடும்பச்செலவுக்கு என்ன செய்வோம், தனது தொழிலை ஆரம்பிக்க என்ன வழி இருக்கின்றது என்று தெரியாமல் கவலையில் மூழ்கியிருந்த தனக்கு அவற்றைத் தீர்ப்பதற்குரிய ஒரு தீர்வு முன்வைக்கப்படுகிறது அதுவும் எதிர்பாராத முறையில் தன்னை நாடிவருவது அவருக்கு அதிசயமாகவே தெரிந்தது.

தன்னைச் சுதாகரித்துக் கொண்ட திரு. முருகதாஸ் அவர்கள் அந்தப் பெரியவரை வழியனுப்பிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் சேர்ந்ததும் இவர் புனித பூவ ரசமரத்தின் இலையைப் பெற்றுக் கொண்டது பற்றி எடுத்துக் கூறி அந்தப் புனித இலை தன்னிடம் கிடைத்ததைத் தொடர்ந்து தனது மனோ நிலையில் அமைதியும் தெளிவும், உற்சாகமும் ஏற்பட்டமை பற்றி எடுத்துக் கூறினார். மேலும் அந்த இலையினுடைய சிறப்பை யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று நினைத்த தனக்கு அப்பொழுது சந்நிதியானே அதனுடைய சிறப்பைக் காண்பித்துள்ளதை நினைந்து ஆனந்தப் பரவசம் அடைவதாகக் கூறினார். இவ்வாறு தனது உள்ளத்தினுள், உடம்பிலும் மகிழ்ச்சி பொங்கத் தனது நன்றியை அந்த அன்பருக்கு வெளிப்படுத்திவிட்டுச் சந்நிதியான் புனித பூவரசமிலையினூடாகத் தன்மேற் கருணை காட்டுகின்ற அற்புதத்தைச் சிந்தித்தவண்ணம் அங்கிருந்து புறப்பட்டார்.

எல்லாம் அவன் அருளாலே!

ஓம் முருகா!

## மகாபாரதம் காட்டும் வாழ்க்கை நெறி

மனிதர்களால் ஆகாத காரியம் இறைவனாலே மட்டும் நிறைவேற்றமுடியும். அவையில் அத்தனை தர்மவான்கள் முன்னிலையில் நீதி கேட்டும் வீரம் நிறைந்த கணவர்கள் இருந்தும் காப்பாற்றப்படாத திரௌபதியின் மானம் இறைவனால் காக்கப்பட்டது.

மனிதர் எக்காரியம் செய்யினும் இலக்கு முக்கியமானது என்பதை அர்ச்சுனனின் வில்பயிற்சிமூலம் மகாபாரதம் காட்டுகிறது. பொறி, புலன்கள் பிறவழி போகாது ஒன்றியிருந்தால் மட்டும் இறைவனை அகக்கண்ணால் காணமுடியும், அருள் மழையில் நனையமுடியும், பேரானந்தத்தில் திளைக்கமுடியும்.

அன்று திரௌபதி கூந்தல் விரித்தமையால் பாரதப்போர் நடைபெற்றது. பெண்கள் கூந்தல் விரிப்பது அனர்த்தங்களின் ஆரம்ப வழியாக இருக்கிறது.

கந்தையா ஜேந்திரன்

சோம்பேறிப் பேச்சுப்பேசிப் பொழுதை வீணாக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயில்வாகன சுவாமிகளின்
# 15 வது ஆண்டு
## குரு பூசைத்தினப் போட்டிகள் — 2000



மயில்வாகன சுவாமிகளின் 15வது ஆண்டு குருபூசை 05 - 08 - 2000 சனிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

தொடர்ச்சி 41ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கம வழிபாடு

(தொடர்ச்சி .....)

இந்துக்களுடைய வாழ்வில் விரதம் முக்கியமான ஒரு வழிபாடாகும். இன்றும் கூட சிவனடியார்களை அழைத்துத் திருவமுது செய்யப்படுகிறது. மட்டுமன்றித் திருமணம் போன்ற மங்களக் கிரியைகளிலும் அந்தியேட்டி போன்ற அபரக்கிரியைகளிலும் சிவனடியார்களை அழைத்துத் திருவமுது செய்விப்பதோடு அவர்களின் வாழ்வுக்கு வேண்டிய பொருள்களை வழங்குவதும் சங்கம வழிபாட்டைக்காட்டி நிற்கிறது.

மேலும் ஆலயங்களோ சைவர்களின் வழிபாட்டுத் தலமாக உள்ளன. இந்த மாகேஸ்வரனுக்குப் பணிவிடை செய்கின்றார்கள். இது பதித் தொண்டு எனப்படும். ஆனால் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்கிறார்கள். தாக சாந்தி நிலையங்கள் அமைத்துத் தாகம் தீர்ப்பதும் மடங்கள் அமைத்து அன்னதானம் கொடுப்பதும் (செல்வச்சந்நிதிக்கந்தன் அன்னதானக் கந்தன்) மரங்கள் வளர்த்து நிழல் கொடுப்பதும் எனப் பல அமையும். இவை எல்லாம் மாகேஸ்வரன் பணி என்று கூறப்படுகிறது. இதற்கு மறுதலையாகச் சிவனுக்குச் செய்யும் துரோகம் பதித் துரோகம் + சிவத்துரோகம் என்றும் பசுக்களுக்குச் செய்யும் துரோகம் பசுத்துரோகம் / பசுத்தீவினை என்றும் சைவசித்தாந்த நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனடிப்படையை நோக்கும் போது சிவனடியார்க்குப் பணிவிடை செய்வதால் புண்ணியம் கைகூடுவது போலத் துரோகம் செய்வது தீவினை என்பதும் சிவனடியாரின் பெருமையைக் காட்டி நிற்கிறது. இக் கருத்தைத் திருமூலரும் தனது திருமந்திரத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே. (516)

தாயுமான சுவாமிகள் தான் மேல்நிலை அடைய வேண்டும் என்பதற்கும் பேரின்பத்தை அநுபவிப்பதற்கும் சிவனிடம் வரம் கேட்கும்

செருக்கைப் போல் தீமை எதுவும் இல்லை.

போது சிவனடியார்க்குப் பணி செய்யக்கூடிய நிலைமை நமக்குக் கிடைக்கின்றதோ அப் போதும் இன்பம் கிடைக்கும் எனப் பராபரக் கண்ணியிற் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
> இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே."

இவ்வாறு சிவனடியார்களின் பெருமையையும் அவர்களை வழிபட்டு மேல்நிலை அடைந்த நாயன்மார்களையும் பெரியபுராணம் மிகச் சிறப்பாகப் போற்றியிருப்பதையும் மேலே கண்டோம். 63 நாயன்மார்களில் 19 நாயன்மார்கள் ஏதோ ஒரு வழியில் சிவனடியார்க்கே சேவை செய்து சங்கம வழிபாட்டால் முத்தியடைந்திருக்கின்றார்கள். அவர்கள் பெயர் விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| திருக்குறிப்புத்தொண்டர் | விறன்மிண்டர் |
| இளையான்குடிமாறர் | புகழ்ச்சோழர் |
| நின்றசீர் நெடுமாறன் | மெய்ப்பொருள் |
| காரைக்காலம்மையார் | சத்திநாயனார் |
| கலிக்கம்ப நாயனார் | முனையடுவார் |
| நரசிங்கமுனையரையர் | இடங்கழியார் |
| மானக்கஞ்சாறர் | அமர்நீதியார் |
| சிறுத்தொண்டர் | மூர்க்கர் |
| திருநீலகண்டர் | ஏனாதி |
| இயற்பகையார் | |

(முற்றும்.)

செ. கந்தசத்தியதாசன் B. A. (Hons)

## உண்மை - பணிவு

பணிவுள்ளவர் போல் குழைந்து நெளிந்து பேசித் திரிகிறவர்களும், உண்மையில் அப்படியில்லாமல் ஏமாற்றுவதில்லையா? பணிவுள்ளவனும் உண்மையாக வாழாமல் இருக்கலாம். ஆனால் உண்மையாக வாழ்கிறவன் பணிவில்லாமல் இருக்கமுடியாது. உண்மை என்பது எல்லா நல்ல குணங்களையும் இணைக்கின்ற ஒரு பெருங்குணம். பணிவு அப்படி இல்லை. பிறரைக் கவர்கின்ற ஒரு சிறிய குணங்களில் பணிவும் ஒன்று. பல பெரிய குணங்கள் இல்லாதவனிடமும் பணிவு என்ற ஒரு சிறிய குணம் இருக்கலாம். ஆனால் உண்மை என்ற ஒரு பெருங் குணமோ எல்லாச் சிறிய குணங்களையும் உடன் கொண்டது.

மற்றவரை மகிழ்வித்தால் நீ மகிழ்ச்சியடைவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PRACTICE QUESTIONS
( FOR YEAR 8 AND 9 )

Complete the sentences with the words in brackets. Use the Simple Present, Present progressive or Simple past. (The Sentence may require Statement, Negative or Question forms)

1. E. g Tom (walk) walks to work almost every day.
2. I can See Tom from my window. He's on the Street below. He (walk) .... ..... to work right now.
3. (Tom, walk) ...... ......... to work every day ?
4. (you, walk) ......... ... to work every day ?
5. I usually take the bus to work, but yesterday. I (walk) ... ... ... ... to my office.
6. On my way to work yesterday, I (See) .. .. ... an accident.
7. Alex (see, not) ......... .... the accident.
8. (you, See) ... ... ....... the accident yesterday ?
9. Tom (walk, not) ......... ... to work when the weather is bad. He (take) ............. the bus.
10. I (walk, not) ......... to work in bad weather either.

Answers for year 6 and 7 Practice Questions

1. (a) have (b) had (c) have (d) has, have (e) had (f) has (g) had (h) has, have (i) have (j) has (k) have (l) had (m) has (n) have (o) had (p) has (q) have (r) had (s) have (t) has.

2. (1) Plays, Play (2) drink, drinks (3) rains (4) play (5) bark (6) look (7) looks (8) look (9) rises (10) appear.

S. Thurairajah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி குரு பூசை தொடர்பாகப் பின்வரும் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

## 1. கட்டுரைப்போட்டி :

தலைப்பு :- சந்நிதியில் மாகேசுர பூசைக்கு வித்திட்ட ஞானபரம்பரையினர்.

இப்போட்டி வயதுக்கட்டுப்பாடற்ற திறந்த போட்டியாக இடம் பெறுகின்றது. கட்டுரை ஐந்நூறு (500) சொற்களுக்கு குறையாது இடம்பெறவேண்டும். முதல் மூன்று இடங்களைப்பெறும் கட்டுரைகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். கட்டுரை எமக்கு கிடைக்க வேண்டிய இறுதி நாள் 21-07-2000.

குறிப்பு:- கட்டுரைக்கு உதவக்கூடிய சில தகவல்களை சந்நிதியான் ஞானச் சுடர் வெளியீடுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## 2. வழமையாக மாணவர்களுக்கிடையே நடாத்தப்படும் போட்டிகள்

(அ) பஞ்சபுராணம் ஓதுதல் (பண்ணுடன்)  (ஆ) பேச்சுப்போட்டி

| பிரிவு - I | பிரிவு - II | பிரிவு - III |
| --- | --- | --- |
| தரம் 6 - 7 | தரம் 8 - 9 | தரம் 10 - 11 |

ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவன் பஞ்சபுராணம் ஓதும் போட்டியிலும், பேச்சுப்போட்டியிலும் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்விகற்கும் ஆண்டு, பிறந்த திகதி, பாடசாலை என்பவற்றின் விபரங்களை அதிபர் மூலம் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி 14 - 7 - 2000 ஆம் திகதிக்கு முன் தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கலாம்.

வழமைபோல விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு போட்டி பற்றிய விபரங்கள் அனுப்பி வைக்கப்படும்.

போட்டிகள் 29 - 07 - 2000 சனிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும்.

வெற்றிபெறும் மாணவர்களுக்கு 05 - 08 - 2000 சனிக்கிழமை நடைபெறும் குரு பூசைத்தினத்தில் பணத்தொகையும், பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

குரு பூசைப் போட்டிக் குழு,
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

## அன்பு

உலகில் எல்லா விதமாகவும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இரண்டு வகையான அன்பு உண்டு. யார் மேல் அன்பு செய்ய விரும்புகிறோமோ அவரையே ஆள விரும்புகிற அன்பு ஒன்று. யார்மேல் அன்பு செய்ய விரும்புகிறோமோ அவருக்கே ஆட்படுகிற அன்பு ஒன்று. ஆள விரும்புகிற அன்பைக் காட்டிலும் ஆட்படுகிற அன்பு மிகவும் பக்குவமானது. ஆள விரும்புகிற அன்பில் சுயநலமும் அகங்காரமும் உண்டு. ஆட்பட விரும்புகிற அன்பில் தியாகத்தைத் தவிர வேறெதுவுமே இல்லை. ஆள விரும்புகிற அன்புக்கு உலகில் காதல் என்றும், பிரேமை என்றும் விதம் விதமாகப் பெயர் சொல்லுகிறார்கள். ஆட்படுகிற அன்புக்குப் பக்தி என்று பெயர் சொல்லுகிறார்கள். அவ்விதமான அன்பின் மூலம் பல அடியார்கள் இறைவனது அருளுக்கு ஆட்பட்டு பேரானந்த வாழ்வு பெற்றுள்ளார்கள். நாமும் அவ்வழி நடப்போமாக.

'' அன்பே சிவம் ''

# ஆடி மாத வாராந்த நிகழ்வுகள்

07 - 07 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. க. சிவக்கொழுந்து J. P.

( பேரவை உபதலைவர், உடுப்பிட்டி )

சொற்பொழிவு : சுவாமி விவேகானந்தரின்

" ஆன்மீக தானம் "

வழங்குபவர் : சுவாமி சித்ரூபானந்தா

( ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை )

---

14 - 07 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. க. கந்தசாமி

( பேரவை உறுப்பினர், கரணவாய்)

சொற்பொழிவு : "கந்தனவன் துணையிருந்தால் "

வழங்குபவர் : K. P. ஆனந்தநடேசன்

( இலங்கை வங்கி, பருத்தித்துறை )

---

21 - 07 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. கு. இரவீந்திரன்

( ஆசிரியர் யாழ் / தொண்டைமானாறு வீ. ம. வி. )

சொற்பொழிவு : " இடர் வந்துற்ற போது "

வழங்குபவர் : திரு. இ. இராகவன்

( ஆசிரியர் விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி )

---

28 - 07 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## ஆடி - 2000

வெளியீட்டுரை : திரு. லயன் க. செல்வரெத்தினம் J. P.

மதிப்புரை : திரு. ந. சிவபாதம் J. P. புத்தொளி

( ஓய்வுபெற்ற அதிபர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2000 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2001 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டையானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org